இதழ்-65

01.11.2023

# தூமி

பல்சுவை மின்னிதழ்



## பெருவெள்ளத்திற்கான பயணம்

www.thumi.org
thumi2016@gmail.com
www.facebook.com/Thumi06

துமி பல்சுவை மின்னிதழ்

**ஆசிரியர்**
ச. சந்தோஷன்

**இணை ஆசிரியர்கள்**
ஐ.வி. மகாசேனன்
இ. வினோஜன்

**திறனாய்வாளர்கள்**
கு. கீர்த்தனன்
வ.டியனி

**வடிவமைப்பாளர்**
வ. குணநீதன்

**செய்தியியலாளர்**
ந. மயூரன்

# இவ்விதழில் துமித்தவை...

03 வாழ வைத்து வாழுங்கள்
06 சுதந்திர தேவியின் கதை
14 தொடரும் போதைக்கெதிரான பயணம்
14 அமைதிக்கான நோபல் பரிசு
15 போதை உனக்கு பாதையல்ல
21 மூளைசாலிகள் வெளியேற்றமும் மருத்துவக்கல்வியின் எதிர்காலமும்
27 தற்கொலையால் தடமழியும் தலைமுறைகள்
30 சித்திராங்கதா
36 உளவியல் ஆய்வுகளில் எதிர்கொள்கின்ற சவால்கள்
31 விவசாயத்தில் நவீன தொழில்நுட்பங்கள்
36 சூடுபிடிக்கிறது உலகக்கிண்ணம் 2023



வாசகர்கள் அனைவருக்கும்
இனிய தீபாவளி
நல்வாழ்த்துக்கள்

# வாழ வைத்து வாழுங்கள்




இன்று பூமியில் நடமாடிக் கொண்டிருக்கும் எந்த மனிதனைப் பார்த்தாலும் குறைந்தபட்சம் ஏதாவது ஒரு அழுத்தத்திற்காவது உட்பட்டவனாகத் தான் இருக்கிறனான்.

வருடத்தின் 364 நாட்களும் தமது ஊழியர்களை அழுத்தத்தில் வைத்திருந்து விட்டு, ஒரு நாள் மட்டும் அழுத்தத்திலிருந்து விடுபடுவது எப்படி என்று செயலமர்வு நடத்தும் நிறுவனங்களை இன்று எல்லா இடங்களிலும் காண முடிகிறது. இலக்கு என்பது தேவைதான். ஆனால் சக்திக்கு அப்பாற்பட்ட இலக்குகளை தொடர்ச்சியாக வழங்கி, அவற்றை அடைய வைப்பதற்காக அவனுக்கு உச்சபட்ச அழுத்தத்தை பிரயோகித்து, அவனை தனி மனித வாழ்விலிருந்தே பிரித்து விடும் உத்தியைத்தான் இந்த வியாபார உலகம் இன்று கையாள்கிறது. இந்த உத்தி உயரதிகாரியில் இருந்து கீழ் நிலை ஊழியர் வரை படிப்படியாக பிரயோகிக்கப்பட்டு அலுவலகத்தில் அனைவருமே அழுத்தத்திற்கு உள்ளானவர்களாக வாழப் பழகிவிட்டார்கள்.



தனியே அலுவலகங்கள் மட்டுமல்ல, சாதாரண வருடந்தோறும் நடக்கும் தவணைப் பரீட்சைகளில் கூட சிறு பிள்ளைகள் மீது அதிக புள்ளிகள் எடுத்தேயாக வேண்டும் என்கிற அழுத்தம் பிரயோகக்கப்படுகிறது. இது பல்கலைக்கழகம் வரை தொடர்கிறது. பாடசாலையில் சாதித்தவனால் பல்கலைக்கழகத்தில் எதிர்பார்த்தளவு சாதிக்க முடியாமல் போகலாம். வெற்றிகளையும் பாராட்டுக்களையும் மட்டுமே கண்டவன் முதல் தடவையாக தோல்வியையும் அவமரியாதைகளையும் பின்னடைவுகளையும் சந்திக்கும் போது அதற்கு தன்னை தகவமைத்துக் கொள்ளமுடியாமல் போகிறது. அதனால் ஏற்படும் அதீத அழுத்தம் அவனையும் நிலைகுலைய வைக்கிறது.

விஞ்ஞானத்தில் ஓரலகு பரப்பளவில் செங்குத்தாக தாக்கும் விசையை அழுத்தம் என்கிறார்கள். அந்த ஓரலகு பரப்பளவு சிறிதாக இருந்தால் அது தாங்க வேண்டிய அழுத்தம் பெரிதாக இருக்கும். அதற்கு அந்த பரப்பின் தன்மையும் வலிமையற்றதாக இருந்தால் அந்த அழுத்தத்தை தாங்க முடியாத அந்த பொருள் உடைந்து விடும். சனநெருக்கடியான பேருந்தில் நுன்னிய அடிப் பரப்பைக் கொண்ட கீல்ஸ் பாதணிகளை அணிந்த பெண்களின் முழு உடல்ப் பருமனும்

அந்த நுன்னிய அடிப்பரப்பினூடாக அழுத்தப்படும் போது அதனால் தவறுதலாக மிதி வாங்குபவரின் கால்களில் அலவாங்கு ஏறியது போல் பாரிய வலியை உணர்வார். அதுவே சாதாரண செருப்பு அணிந்தவர் ஏறி மிதிக்கும் போது அந்தளவிற்கு வலியை உணர மாட்டார்கள்.

எனவே இவ்வாறான அழுத்தங்களை பாடசாலைகளில், பல்கலைக்கழகங்களில், வேலைத்தளங்களில் சந்திப்பவர்கள் அவற்றில் இருந்து மீள முடியாமல் தமது தனிப்பட்ட வாழ்க்கையை அனுபவிக்க முடியாமல் தவிக்கிறார்கள். இதற்கு தீர்வாக அவர்களிடம் எதுவுமே இல்லாத போது இந்த உலகை விட்டு ஓடி விடுவதை தெரிவு செய்கிறார்கள். அதிகரிக்கும் தற்கொலைகளுக்கு அடிப்படைக் காரணம் இதுதான்.

அதே போல, அதிகரிக்கும் விபத்துகளுக்கும் இதுதான் காரணம் என்பது ஒரு யதார்த்தமான உண்மை. இவ்வாறான மீள முடியாத மன அழுத்தங்களோடு வாகனங்களை செலுத்தும் போது அவர்கள் கவனம் வீதியிலோ, வாகனத்திலோ இருப்பதில்லை. இதனால் விபத்துக்கள் ஏற்படுகிறது.

எனவே, தெரிந்தோ தெரியாமலோ பலரை கொலை செய்து கொண்டிருக்கிறோம். வியாபார உலகத்தின் ஓட்டம் சற்றே குறைக்கப்பட வேண்டும். கொரோனோ போன்றவை அவற்றை ஓரளவு எமக்கு மீள நினைவு படுத்தியிருந்தாலும் திரும்ப ஓடத் தொடங்கிவிட்டோம்.

ஒரு நல்ல தலைவன் என்பவன் தானும் அழுத்தங்களுக்கு தலைசாய்க்காதவனாக இருப்பதுடன், தன் அழுத்தங்களை இன்னொருவர் தலைக்கு மாற்றி விடாதவராகவும் இருக்க வேண்டும். நாளை என்பதே நிச்சயமில்லாத ஒரு முறைதான் வாழ முடியும் என்கிற மாதிரியான வாழ்க்கையின் ஒவ்வொரு கணங்களையும் ரசித்து வாழப் பழகிக் கொள்ள வேண்டும்.

***வாழ வைத்து வாழுங்கள்...***
***வாழ்க்கை இனிதாகும்...***

# உதிரம் தந்து உயிர் காப்போம்

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை இரத்த வங்கியில் அனைத்து வகை குருதிக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது என வைத்தியசாலை நிர்வாகம் தெரிவித்துள்ளது. தினமும் குருதிக்கான தேவை அதிகரித்துள்ளதால் நோயாளர்களுக்கு தேவையான குருதியை வழங்க முடியாதுள்ளது என வைத்தியசாலை நிர்வாகம் தெரிவித்துள்ளது. இதற்கு முன்னர் இரத்ததானம் செய்து நான்கு மாதங்கள் நிறைவடைந்தவர்களும் புதிதாக இரத்ததானம் செய்ய விரும்புவர்களும் இரத்ததானம் செய்ய முடியும்.

# அபயம் இரகசியம் பேணும்

## இலவச வைத்திய தொலைபேசி அழைப்பு சேவை

# 071 07 12345



**மனநெருக்கடிகளில் இருப்பவர்களும், அவர்களது உள்ளம் உயிர் காக்க துணை நிற்பவர்களும் தொடர்பு கொள்ளக்கூடிய அவசர அழைப்பு**

(போதைப்பொருள் பாவனையில் இருந்து மீள நினைப்பவர்களும் இச் சேவையை பயன்படுத்தலாம்)



தங்களால் வழங்கப்படும் சுயவிபரங்கள் மற்றும் தகவல்கள் யாவும் இரகசியமாக பேணப்படும்.

**24 மணிநேரமும் வைத்தியரையும், ஆலோசகரையும் உடனடியாக தொடர்பு கொள்ளலாம்**

பாதிக்கப்பட்டவர்களோ அல்லது அவர்களை காண்பவர்களோ (உறவினர், நண்பர்கள், நலன்விரும்பிகள்) இச்சேவையை பயன்படுத்திக் கொள்ளலாம்.

பங்குனி 2021

அபயம் நிறுவனம்
மானிப்பாய், யாழ்ப்பாணம்

# சுதந்திர தேவியின் கதை




ஊர்கூடித் தேர் இழுப்பது நமக்கெல்லாம் தெரியும். ஊரே கூடினால் தான் தேரும் நகரும். ஊரும் நகரும். அப்படி ஊரே ஒன்று கூடி உலகின் ஓர் அடையாளச்சின்னத்தை உருவாக்கிய கதையை நீங்கள் அறிவீர்களா? ஆம்.. அட்டைப்படத்தில் காட்சிப்படுத்திய சுதந்திரதேவியின் சிலையைப் பற்றித்தான் சொல்கிறோம்..


அமெரிக்கப் புரட்சியின் போது ஐக்கிய அமெரிக்காவிற்கும், பிரான்சிற்கும் இடையே நட்புறவு வலுப்பெற்றது. அந்த நட்புறவின் நித்திய சாட்சியாய் நியூயோர்க் துறைமுகத்தில் நிலைபெற்று எழுந்ததே சுதந்திரதேவியின் சிலை. அது பிரான்ஸ் நாட்டினால் ஐக்கிய அமெரிக்காவிற்கு அன்பளிப்பாக வழங்கப்பட்டதாகும்.

கடல்வழியாகச் செல்பவர்கள் தூ ரத்திலிருந்து பார்க்கும்போது, கம்பீரத் தோற்றமுடைய ஒரு பெண்மணி சுதந்திரம் பெற்ற மகிழ்ச்சியில் இருப்பது போன்ற காட்சியில் சிலையின் அழகு பரிணமிக்கிறது. பண்டைய ரோமின் அடிமைத்தளையிலிருந்து விடுவிக்கும் லிபர்டாஸ் என்ற கடவுளச்சியின் வடிவம் போல விடுதலையை முன்னெடுத்துச் சென்று விளக்கொளி பரப்பும் தேவதை என்ற சிந்தனையில் சுதந்திர தேவி சிலை வடிவமைக்கப்பட்டுள்ளது.

இச்சிலையின் உட்புறத்தில் அமைக்கப்பட்டுள்ள ஒற்றை வளைவு படிக்கட்டுகள் மூலம் (354 படிக்கட்டுகள்) சுதந்திர தேவி சிலையின் கிரீடத்தை அடைய முடியும். ஒரே நேரத்தில் அங்கிருக்கும் 25 ஜன்னல்கள் வழியாக 30 பேர் நியூயார்க் நகரைப் பார்வையிடலாம். பிரம்மாண்டமான இச்சிலையை அருகிலிருந்து பார்ப்பதே அலாதி சுகம் என்றால் அதன் உச்சியில் ஏறி நின்று நியூயோர்க் நகரையே ரசிப்பது எத்தனை அற்புதமான விசயம்.

இந்த நினைவுச்சின்னத்தை உருவாக்கும் யோசனை ஒரு முக்கிய பிரெஞ்சு சிந்தனையாளர், எழுத்தாளர் மற்றும் அரசியல்வாதி, பிரெஞ்சு அடிமை எதிர்ப்பு சமூகத்தின் தலைவரான எட்வார்ட் ரெனே லெபெப்வ்ரே டி லாபூலே என்பவராலே கூறப்பட்டதாகும். 1865 நடுப்பகுதியில் பிரெஞ்சு சிற்பி ஃ பிரடெரிக் அகஸ்டே பார்தோல்டி என்பவருடனான உரையாடலில் அமெரிக்க உள்நாட்டுப் போரில் அடிமை எதிர்ப்பு சக்திகளின் வெற்றிக்கு ஒரு தோற்றம் கொடுக்க லாபூலே எண்ணியதன் விளைவினாலே
இந்த யோசனை வெளிப்படுத்தப்பட்டது. இது ஒரு குறிப்பிட்ட திட்டம் அல்ல என்றாலும், இந்த யோசனை சிற்பி பார்தோல்டியை ஊக்கப்படுத்தியது.

அதனால்தான் பிரமாண்ட சிலையை உருவாக்கிய பெருமை சிற்பி ஃ பிரடெரிக் அகஸ்டே பார்தோல்டிக்கு சொந்தமானது. பார்தோல்டி 1834 இல் ஒரு பணக்கார யூத குடும்பத்தில் பிறந்தவர். பாரிஸ ின் புகழ்பெற்ற எஜமானர்களுடன் படித்தவர். ஆனாலும் அதில் அதிக ஆர்வம் இல்லாமல், தனக்கென இலட்சிய திட்டங்கள் நிறைந்தவராய்



திகழ்ந்தார். மக்களிற்குள் நுழைவதற்கு, கூட்டுரிமை கழகங்களுடன் (Freemason) நேரடியாக தொடர்புடைய செல்வாக்கு மிக்க உறவினர்களின் உதவியை பார்தோல்டி நாடினார்.

அவரது கற்பனையும் எண்ணங்களும் இந்த பிராந்தியத்தின் கம்பீரமான நினைவுச்சின்னங்கள் குறித்த ஆச்சரியத்திலே இருந்தன. அந்த நினைவுச்சின்னங்கள் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக பிழைத்துள்ளன. ஆகவே, தனது பெயர் எப்போதும் அழியாத வகையில் மகத்தான மற்றும் சுவாரஸ்யமான ஒன்றை உருவாக்கும் யோசனை அவரது தலையில் பிறந்தது. பிரான்சில் மூன்றாம் நெப்போலியன் ஆட்சியின் போதிருந்த அடக்குமுறை அரசியல் நிலைமை இந்த யோசனையை செயல்படுத்த அனுமதிக்கவில்லை.

19ம் நூற்றாண்டின் 70 களில், எகிப்தில் கூட்டுரிமை கழக கட்டுப்பாட்டின் கீழ், சுயஸ் கால்வாயின் கட்டுமானம் நடந்தது. ஒரு இளம் இலட்சியவாதியாய் பார்தோல்டி அங்கு வந்தார்.

கட்டுமானத் தலைவரான ஃ பெர்டினாண்ட் லெசெப்ஸுனை சந்தித்தபின், பார்தோல்டி தனது திட்டத்தைப் பற்றி பரிந்துரைக்க அவரிடம் பரிந்துரைத்தார். அவரது திட்டம் என்பது- எதிர்கால சுயஸ் கால்வாயின் நுழைவாயிலில் கிரேட் ஸ்பிங்க்ஸின் உயரத்தை விட இரு மடங்கு உயரமாகவும்,

ஒரு கலங்கரை விளக்கமாகவும் செயல்படக்கூடிய ஒரு மாபெரும் சிலையை நிறுவுவதாகும்.

பார்தோல்டி அதற்காக உள்ளூர் அரசாங்கத்தால் பரிசீலிக்க ஒருவிதமான மாதிரியை தூண்டிவிட முடிவு செய்தார்.

பார்தோல்டி எகிப்திய ஆடைகளில் ஒரு மாதிரியை அலங்கரித்து அதன் கையில் ஒரு ஆம்போராவை வைத்து, தலையில் மாலை அணிவித்தார். ஆனால் கட்டுமானத்தலைவர் லெசெப்ஸ் பண்டைய ஈரானிய கடவுளான மித்ராவின் (சூரியனின் கடவுள்) பண்புகளை - அமைதி, நல்லிணக்கம் ஆகியவற்றைப் பயன்படுத்துமாறு அவருக்கு அறிவுறுத்தினார். இவ்வாறு அந்த சிலைக்கு மித்ரா கடவுளிடமிருந்து ஒரு விளக்கும், ஏழு கதிர் கிரீடமும் கிடைத்தது.

சிலையின் தோற்றம் உருவானபின் எகிப்து அரசாங்கம் பிரம்மாண்டமான சிலைக்கு பணம் செலவழிக்க மறுத்துவிட்டது. பிரான்சிலிருந்து அச்சிலைக் கட்டமைப்பைக் கொண்டு செல்வதும் அதை நிறுவுவதும் எகிப்திய பொருளாதாரத்திற்கு மிகவும் விலை உயர்ந்தது என்று அரசாங்கம் முடிவு செய்தது. எனவே பார்தோல்டி மீண்டும் மன வருத்தத்தோடு பிரான்சுக்கு திரும்பினார்.

1876 ஆம் ஆண்டு நெருங்கி வந்தது . அமெரிக்க சுதந்திரத்தின் நூற்றாண்டு. சுதந்திரத்திற்காக அர்ப்பணிக்கப்பட்ட கலையின் உண்மையான - தலைசிறந்த படைப்புகள் அமெரிக்காவில் இல்லாதது குறித்த அரசியல் வட்டாரத்தின் புகார்களைக் கேட்ட பிரெஞ்சு செனட்டரும், கூட்டுறவுக்கழக உறுப்பினருமான எட்வார்ட் ரெனே லெபெப்வ்ரே டி லாபூலே எகிப்தில் தோல்வியடைந்த பார்தோல்டியின் திட்டத்தை புதுப்பிக்க முடிவு செய்தார்.
அமெரிக்கா சுதந்திரம் பெற்றதை ஆளுமைப்படுத்தும் ஒரு நினைவுச்சின்னத்தை உருவாக்க திட்டம் வகுத்தார்.

அந்த வாய்ப்பை பார்தோல்டி தன் கையில் எடுத்தார். கையில் ஒரு ஜோதியுடன் ஒரு பெண் சிற்பத்தை உருவாக்கும் பணியினை தொடங்கினார். நினைவுச்சின்னத்தின் முதல் ஓவியங்களை உருவாக்கினார். ரோமானிய ஆடைகளில் ஒளிர்ந்த அப்பெண்ணின் இடது கையில் ஜூலை 4, 1776 என்று எழுதப்பட்ட புத்தகம் இருந்தது. இந்த தேதி அமெரிக்காவின் சுதந்திரப் பிரகடனத்தை ஏற்றுக்கொண்ட நாளாகும். அவளது தலையில் ஏழு முனைகள் கொண்ட கிரீடம் இருந்தது. இந்த ஏழு முனைகளும் ஏழு கண்டங்களையும் ஏழு கடல்களையும் குறித்தன.

வரைந்த ஓவியங்களுடன் பார்தோல்டி அவர் திட்டத்தின் ஒப்புதலுக்காக அமெரிக்காவிற்கு அனுப்பப்பட்டார். இந்த திட்டத்திற்கு அமெரிக்க தரப்பும் ஒப்புதல் அளித்தது. "உலகத்தை ஒளிரச் செய்யும் சுதந்திரம்"

என்ற நினைவுச்சின்னத்தின் கட்டுமானத்தைத் தொடங்க இரு நாட்டு சக்திகளும் ஏகமனதாய் முடிவு செய்தார்கள்.


நாடுகளின் பரஸ்பர ஒப்புதலால், இந்த நினைவுச்சின்னம் அமெரிக்காவின் சுதந்திரப் பிரகடனத்தின் நூற்றாண்டு விழாவிற்கு பிரான்சிலிருந்து அமெரிக்காவிற்கு ஒரு பரிசாக இருக்கும் என்று முடிவு செய்யப்பட்டது. நாடுகளுக்கிடையேயான ஒப்பந்தத்தின் மூலம், இந்த சிற்பம் பிரெஞ்சு தரப்பினரால் வடிவமைக்கப்பட வேண்டும் என்றும் மேலும் அமெரிக்க தரப்பு பீடத்தை உருவாக்கும் பணியில் ஈடுபடும் என்றும் முடிவானது.

ஆனால் அதன்பின்தான் இரு நாட்டவர்களிற்கும் அதன் சாத்தியத்தன்மை சவாலானது. அட்லாண்டிக் பெருங்கடலின் இருபுறமும் பணப் பற்றாக்குறை பெரிதாய் உணரப்பட்டது. அமெரிக்காவிற்கான பரிசின் சுமை பிரெஞ்சின் சாதாரண குடிகள் மீதே சுமத்தப்பட்டது.

தேவையான நிதியை ஈட்டும் நடவடிக்கைகளில் இருநாடுகளும் மும்முரம் காட்டின. லாபூலே தலைமையில் ஒரு பிராங்கோ-அமெரிக்கன் யூனியன் அவசரமாக நிறுவப்பட்டது. நிதி திரட்டலுக்கான குழுக்கள் இரு மாநிலங்களிலும் ஏற்பாடு செய்யப்பட்டன. பிரெஞ்சு தலைமையகத்தின் தலைமைப் பதவியில் சுயஸ் கால்வாயின் கட்டுமானத்தலைவராய் இருந்த ஃபெர்டினாண்ட் லெசெப்ஸே பணியாற்றினார். பிரான்சில் தொண்டு, நன்கொடைகள், பல்வேறு பொழுதுபோக்கு நிகழ்வுகள் மற்றும் அதிஷ்டலாபச் சீட்டுகள் மூலம் 2.25 மில்லியன் பிராங்குகள் திரட்டப்பட்டன.

அமெரிக்காவில் நிதி திரட்டுவதற்காக நாடக நிகழ்ச்சிகள், கலை கண்காட்சிகள், ஏலம் மற்றும் குத்துச்சண்டை போட்டிகள் நடத்தப்பட்டன.

இதற்கிடையில் பிரான்சில் அத்தகைய மிகப்பெரிய செப்பு சிற்பத்தை நிர்மாணிப்பது தொடர்பான வடிவமைப்பு சிக்கல்களை தீர்க்க பார்தோல்டிக்கு ஒரு பொறியியலாளரின் உதவி தேவைப்பட்டது. அதற்காக பிரெஞ்சு கட்டிடக் கலைஞர் யூஜின் வயலட்-லெ-டக் நியமிக்கப்பட்டார். ஆனால் அவர் 1879 இல் இறந்ததனால் அவருக்குப் பதிலாக பிரபல பிரெஞ்சு பொறியியலாளர் அலெக்சாண்டர் குஸ்டாவ் ஈபிள் நியமிக்கப்பட்டார். இந்த சிலையை உருவாக்குவதற்கான முக்கிய பணிகளை குஸ்டாவ் ஈபிளே செய்தார். பிற்காலத்தில் பிரான்சில் பிரபலமான ஈபிள் கோபுரத்தை உருவாக்கியவரும் இவரே. அதேவேளை பனாமா



கால்வாய் கட்டுமானத்தின் போது கற்பனையான பணிகளுக்காக பெரும் நிதியை மோசடி செய்த சூதாட்டத்திற்கும் குஸ்டாவ் ஈபிள் பெயர் பெற்றிருந்தார். ஆனால் பாரிஸின் மையத்தில் அவரது கட்டுமானத்திற்காக பெற்றிருந்த புகழ் வெளிச்சத்தில் அவரது மோசடி மறக்கப்பட்டது.

ஈபிள் அனைத்து கணக்கீடுகளையும் செய்து நினைவுச்சின்னத்தின் இரும்பு ஆதரவையும், துண் சட்டத்தையும் வடிவமைத்தார்.

அதேநேரம் பார்தோல்டி மீண்டும் வடிவமைப்பில் இறங்கி, சில நவீன விவரங்களைச் சேர்த்தார். சிலையின் அடிவாரத்தில் சிலையை பிணைக்கும் சங்கிலிகளைப் போலவே கொடுங்கோன்மையின் உடைந்த சங்கிலிகளை குறியீடாய் வைத்தார். சுதந்திர தேவியின் வலது கையில் உள்ள தீப்பந்தம் மூலம் அடிமைச் சங்கிலியை அறுத்து, சுதந்திர ஒளியை ஏந்துவதாக சித்தரித்தார்.

1875-ஆம் ஆண்டு இந்த சிலையின் கட்டுமானத்தை பிரான்ஸ் தொடங்கியது.

பிரெஞ்சுக்காரர்களின் திட்டத்தின் படி, அமெரிக்கா சுதந்திரப் பிரகடனத்தில் கையெழுத்திட்ட நூறாம் ஆண்டு நிறைவையொட்டி,





அதாவது ஜூலை 4, 1876 க்குள் சிலை தயாராக இருக்க வேண்டும் என்ற உண்மை இருந்தபோதிலும் நிதி திரட்டல் தாமதமானதால் அது சாத்தியமாகவில்லை. உரிய நேரத்தில் ஒரு ஜோதியுடன் பித்தளை கை மட்டுமே தயாராக இருந்தது.

ஆகஸ்ட் 1876 இல், சிற்பத்தின் ஒரு பகுதியை (ஒரு ஜோதியுடன் ஒரு கை) அமெரிக்காவிற்கு கொண்டு வர பார்தோல்டி கட்டாயப்படுத்தப்பட்டார். அங்கு பிலடெல்பியாவில் நடந்த நூற்றாண்டு கண்காட்சியில் இந்த துண்டு நிறுவப்பட்டது. பின்னர் - மாடிசன் சதுக்கத்தில் பார்வையாளர்களுக்கு ஒரு ஜோதியுடன் கையைப் பார்க்க கட்டணம் வசூலிக்கப்பட்டது. ஆயினும் வருமானம் இன்னும் கட்டுமானத்தை முடிக்க போதுமானதாக இருக்கவில்லை.

ஒரு இளம் பத்திரிகையாளர் ஜோசப் புலிட்சர் நிதிமீட்புக்கு களமிறங்கினார். அமெரிக்க மாநிலங்களில் நிதி திரட்டும் பிரச்சாரத்தை ஜோசப் புலிட்சர் வழிநடத்தினார். இவரே பின்னர் மிகவும் மதிப்புமிக்க புலிட்சர் பத்திரிகை விருதை உருவாக்கியவர் என்றும், நியூயார்க் உலக செய்தித்தாளின் வெளியீட்டாளர் என்றும் அறியப்பட்டார். பத்திரிகைகளில் நினைவுச்சின்னத்திற்கான பெரிய அளவிலான நிதி திரட்டும் பிரச்சாரத்தைத் தொடங்கினார். அமெரிக்கர்களை ஒன்றிணைத்து அழைத்தார். அலட்சியமாக இருந்தவர்களை கடுமையாக விமர்சித்தார். குறைந்தது ஒரு சிறிய

நன்கொடை அளித்த அனைவரையும் பற்றி எழுதுவதாக உறுதியளித்தார். அவரது நடவடிக்கைகள் வெற்றி பெற்றன. சில மாதங்களுக்குப் பிறகு தேவையான அளவு நிதியும் திரட்டப்பட்டது.

அதே சமயம் பிரான்சில் பார்தோல்டி இந்தத் திட்டத்திற்காக கடுமையாக உழைக்கத் தொடங்குகிறார்: 1878 வாக்கில் சிற்பி ஏற்கனவே சிற்பத்தின் தலையை முடித்துவிட்டார். 1879 ஆம் ஆண்டில் குஸ்டாவ் ஈபிள் நினைவுச்சின்னச்சிலையின் எ.ஃ.கு சட்டகம் மற்றும் கிரீடம் வரை செல்லும் சுழல் படிக்கட்டுகளை வடிவமைத்தார். பார்தோல்டியும் அவரது உதவியாளர்களும் சட்டத்தில் அணிய வேண்டிய 350 டிரிம் பாகங்களை உருவாக்கினர். பாகங்கள் தாமிரத்தால் செய்யப்பட்டன. அவை வெட்டவும் வளைக்கவும் எளிதானது. இதுவே அடுத்த செயல்பாட்டின் போது பகுதிகளை பொருத்தசாத்தியமாக்கியது.

ஏறத்தாழ பத்து ஆண்டுப் பணிகளின் முடிவில் பிரான்சில் 1884-ஆம் ஆண்டு இச்சிலை முழுமை அடைந்தது. முடிக்கப்பட்ட சிதந்திரதேவி சிலையின் முதல் விளக்கக்காட்சி ஜூலை 4, 1884 அன்று நடந்தது. அதன் பிறகு நினைவுச்சின்னம் பிரான்சிலிருந்து அமெரிக்காவிற்கு அனுப்பப்பட்டது. 214 பாகங்களாக பிரித்து அமெரிக்காவுக்கு கொண்டு செல்லப்பட்ட சிலை 1885 ஜூலை 17 அன்று நியூயார்க்கிற்கு வந்து அங்கு மீண்டும் ஒன்றாக பொருத்தப்பட்டு சிலையாக நிர்மாணிக்கப்பட்டது. நியூயோர்க்கில் இதற்காக சுமார் 4 மாதங்கள் பிடித்தன.

அமெரிக்க தரப்பும் நேரத்தை வீணாக்கவில்லை. இதை நிறுவுவதற்காக “பெட்லோ தீவு” எனப்படும் சிறிய தீவு தேர்வு செய்யப்பட்டது. பெட்லோ தீவு அதிகாரப்பூர்வமாக லிபர்ட்டி தீவு என மறுபெயரிடப்பட்டது 1956 ஆம் ஆண்டில் தான். தீவில் பெரிய பீடம் அமெரிக்காவால் நிறுவப்பட்டது. இந்த பீடம் அடிமட்டத்தில் நட்சத்திர வடிவில் அமைக்கப்பட்டது. இந்த நினைவுச்சின்னத்தின் அஸ்திவாரத்தை அமெரிக்க கட்டிடக் கலைஞர் ரிச்சர்ட் மோரிஸ் ஹன்ட் வடிவமைத்தார். இதன் கட்டுமானப் பணிகள் 1885 கோடையில் தொடங்கியது. ரிச்சர்ட் ஹன்ட் வடிவமைத்த சிலையின் பீடம் காங்கிரஸின் ஒப்புதலுடனும், பார்தோல்டியின் விருப்பங்களையும் கணக்கில் எடுத்துக்கொண்டும், பதினொரு புள்ளிகள் கொண்ட நட்சத்திரத்தின் வடிவத்தில் அமைக்கப்பட்டிருந்தது. பீடத்தின் கட்டுமானப்பணிகளும் ஏப்ரல் 1986 இல் நிறைவுக்கு வந்தது.

இறுதியாக, அக்டோபர் 28, 1886 அன்று, ஆயிரக்கணக்கான பார்வையாளர்கள் முன்னிலையில் அமெரிக்க மக்களுக்குச் சுதந்திர தேவி சிலை அர்ப்பணிக்கப்பட்டது. ஜனாதிபதி கிளீவ்லேண்ட் ஒரு அணிவகுப்பை நடத்தி பெட்லோ தீவுக்குச் சென்றார். அங்கு அனைவரின் மகிழ்ச்சிக்கும் அவர் சிலையை மூடிய பிரெஞ்சு கொடியைக் கிழித்து

"சுதந்திரமே இந்த இடத்தை தனது வீடாக மாற்றிவிட்டது!" என்று கோச முழக்கமிட்டார்.

தொடக்க விழாவில் ஆண்கள் மட்டுமே கலந்து கொண்டனர். லிபர்ட்டி சிலை ஜனநாயகத்தின் அடையாளமாக இருந்தாலும் இது விதிவிலக்காக இருந்தது. லெசென்ஸ ின் எட்டு வயது மகள் மற்றும் பார்தோல்டியின் மனைவி மட்டுமே அந்த நாளில் பெண்களாக தீவில் அனுமதிக்கப்பட்டனர்.

அதுவரை ஆண்பாலாய் இருந்த "சுதந்திரம்" மக்களில் மகிழ்ச்சியையோ தேசபக்தி உணர்வையோ தூ ண்டியிருக்கவில்லை. பெண்ணாய் உருவான சுதந்திரதேவியின் சிலையே அன்றுமுதல் சுதந்திர உணர்வின் சின்னமாக பதிந்து போனது. "லிபர்ட்டி என்லைட்னிங் த வேர்ல்டு" என்று அதன் காரணமாகவே அந்த நினைவுச் சின்னம் அழைக்கப்பட்டது. பார்தோல்டியின் இந்த சிலைக்கான மாதிரி யார்? யாருடைய முகம் உலகை ஒளிரச் செய்கிறது? நிச்சயமாக, இந்த கேள்விகளை அமெரிக்கர்களும் உலகெங்கிலுமிருந்து வந்து போகும் விருந்தினர்களும் கேட்கிறார்கள்.

இந்த விஷயத்தில் இரண்டு கருத்துக்கள் உள்ளன. ரோத்ஸ்சைல்டுடன் யூத சோசலிஸ்டுகளுக்கு நிதியுதவி அளித்த கால்வாய் மற்றும் தையல் இயந்திர தொழில்முனைவோர் ஐசக் சிங்கரின் விதவையான பிரெஞ்சு பெண் இசபெல்லா போயரின் முகத்தை பார்தோல்டி தனது படைப்பில் கைப்பற்றியதாக ஒரு தரப்பினர் நம்புகிறார். சிற்பியின் தாயார் சார்லோட்டின் உருவத்தை சுதந்திரதேவி சிலை மரபுரிமையாகப் பெற்றது என்றும் மற்றவர்கள் கருதுகின்றனர். எந்த கருத்து உண்மை என்பது இன்னும் தீர்க்கப்பட முடியாத ஒரு மர்மமாகும்.

சிலையின் சிறப்பியல்பான பச்சை நிறம் தாமிரத்தால் செய்யப்பட்ட கட்டமைப்பின் மூலம் வழங்கப்படுகிறது. சிலையில் பயன்படுத்தப்பட்ட மொத்தத் தாமிரத்தின் எடை 27.2 டன். இரும்பின் எடை 113.4 டன். சிலையின் மொத்த எடை 204.1 டன். ஆரம்பத்தில், மேற்பரப்பை சுத்தம் செய்வதற்கான திட்டங்கள் முன்மொழியப்பட்டன, ஆனால் பின்னர் தோலைத் தொடக்கூடாது என்று முடிவு செய்யப்பட்டது. இது சிலையை மேலும் அழிவுகரமான அரிப்புகளிலிருந்து பாதுகாக்க வழிவகுத்தது.

பீடத்தின் அடிப்பகுதியில் எம்மா லாசரஸின் கவிதைகளுடன் ஒரு வெண்கல தட்டு உள்ளது. இது 1903 இல் இங்கு தோன்றியது. சுதந்திரதேவி சிலை பெரும்பாலும் கொலோசஸ் ஆ.்.ப் ரோட்ஸ் உடன் ஒப்பிடப்படுகிறது. கொலோசஸ் ஆ.்.ப் ரோட்ஸ் ஏற்கனவே பண்டைய கிரேக்கர்களால் கிமு 280 இல் உருவாக்கப்பட்டதாகும். இது உலகின் ஏழு அதிசயங்களில் ஒன்றாகும். ரோட்ஸ் துறைமுகத்தின் நுழைவாயிலில் கடலுக்கு வெளியே

நிற்கும் ஒரு தடகள இளைஞரின் இந்த பெரிய சிலை பின்னர் பூகம்பத்தால் ஓரளவு அழிக்கப்பட்டது. கவிஞர் எம்மா லாசரஸ் சுதந்திரதேவி சிலை திறக்கப்பட்ட நாளில் ”நியூ கொலோசஸ்” என்ற கவிதையை எழுதினார். 1880 களின் பிற்பகுதியில் ஐரோப்பா முழுவதும் பரவிய படுகொலைகளை கருதியே கவிஞரின் வார்த்தைகள் எழுதப்பட்டன. அதன் பின்னர் புலம்பெயர்ந்தோர் கூட்டம் ஒரு புதிய தாயகத்தைக் கண்டுபிடிக்கும் நம்பிக்கையில் அமெரிக்காவின் கரைக்கு வந்தனர்.

ஐராப்பாவிலிருந்து வெளியேற்றப்பட்ட மற்றும் பின்தங்கிய அனைவரையும் எடுத்துக் கொள்வதற்கான தயார் நிலையில் இந்த கரை காத்திருந்தது. அவர்களுக்கு சுதந்திரத்தையும் சமத்துவத்தையும் அளிக்கும் வாக்குறுதியையும் இந்தக்கரை அளித்தது. இந்த சுதந்திரங்களை கொண்டாடும் சிலையாக சுதந்திர தேவியின் சிலையை அவர் ஆராதித்து எழுதினார். பின்னர் 20 ஆண்டுகளுக்குப் பிறகு, 1903 ஆம் ஆண்டில் அந்த கவி வரிகள் வெண்கலத் தகட்டில் பொறிக்கப்பட்டு அருங்காட்சியகத்தில் சுவரில் இணைக்கப்பட்டு சிலையின் பீடத்தில் வைக்கப்பட்டுள்ளன.

பிரபலமான அந்தக்கவிதையின் கடைசி வரிகள்:
”வைத்திருங்கள், பண்டைய நிலங்கள், உங்கள் மாடி ஆடம்பரம்! அவள் அழுகிறாள் அமைதியான உதடுகளுடன். உங்கள் சோர்வான, உங்கள் ஏழைகளை எனக்குக் கொடுங்கள் உங்களால் மூச்சுத் திணறும் மக்கள் இலவசமாக சுவாசிக்க ஏங்குகிறார்கள், உங்கள் கரையோரத்தின் மோசமான மறுப்பு. வீடற்ற, கொந்தளிப்பான எனக்கு இவற்றை அனுப்பு ங்கள், தங்கக் கதவின் அருகில் என் விளக்கை தூக்குகிறேன்! ”

1924 ஆம் ஆண்டில், சுதந்திரதேவி சிலை ஒரு தேசிய நினைவுச்சின்னமாக தரப்படுத்தப்பட்டது, முன்னர் ஒரு சேரிப் பகுதியாகக் கருதப்பட்ட பெட்லோ தீவு, நினைவுச்சின்னத்தை நிறுவியதன் மூலம் அதன் நிலையை கணிசமாக மாற்றியது, 1956 ஆம் ஆண்டில் இது லிபர்ட்டி தீவு என மறுபெயரிடப்பட்டது, மேலும் 10 ஆண்டுகளுக்குப் பிறகு இது அமெரிக்காவின் வரலாற்று இடங்களின் தேசிய பதிவேட்டில் சேர்க்கப்பட்டது . 1984 ஆம் ஆண்டில் ஐ.நா. லிபர்ட்டி தீவு மற்றும் அதன் மீது அமைந்துள்ள புகழ்பெற்ற நினைவுச்சின்னம் என்பவற்றை உலக முக்கியத்துவத்தின் நினைவுச் சின்னமாக அறிவித்தது. சுதந்திர தேவி சிலை மீண்டும் மீண்டும் மீட்டெடுக்கப்பட்டது, புதிய லைட்டிங் கூறுகள் சேர்க்கப்பட்டுள்ளன. தற்போது, இந்த நினைவுச் சின்னம் லேசர் வெளிச்சத்துடன் பொருத்தப்பட்டுள்ளது.

19ஆம் நூற்றாண்டை சேர்ந்த இந்த சரித்திரம் மிக்க சிலை 21ஆம் நூற்றாண்டை நோக்கி அதிக பிரகாசத்தோடு பயணித்துக் கொண்டிருக்கிறது.

# தொடரும் போதைக்கெதிரான பயணம்....

அபயம் அறக்கட்டளையின் நிதிப் பங்களிப்புடன் சிவபூமி மற்றும் துமி அமைப்புக்கள் முன்னெடுத்துவரும் விழித்தவரெல்லாம் பிழைத்துக் கொள்வர் கருத்திட்டத்தின் கீழ் கொக்குவில் இந்துக் கல்லூரியில் 03.10.2023 அன்று இடம்பெற்ற போதைப்பொருள் பாவனைக்கு எதிரான விழிப்புணர்வு கருத்தரங்கில் வளவாளராக கலந்து கொண்ட மருத்துவர். திரு. ரஜீவ் மாணவர்களுடன் கலந்துரையாடினார். பாடசாலை மாணவர்களையும் ஆசிரியர்களையும் உள்ளடக்கிய அமைப்பும் உருவாக்கப்பட்டது. மாணவர்களுக்கு தேவையான அறிவுறுத்தல்களும் வழிகாட்டுதல்களும் மேற்படி நிகழ்வில் வழங்கப்பட்டது.






## அமைதிக்கான நோபல் பரிசு – 2023

2023 ஆம் ஆண்டு அமைதிக்கான நோபல் பரிசு ஈரானில் பெண்கள் அடக்குமுறைக்கு எதிராக போராடி சிறையில் உள்ள ஈரானைச் சேர்ந்த நர்கேஸ் முகமதிக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. ஈரானில் கடந்தாண்டு செப்டம்பர் மாதம், ஹிஜாப் முறையாக அணியாத குற்றத்திற்கு கைது செய்யப்பட்ட இளம்பெண், சிறையில் உயிரிழந்தார். இதனை கண்டித்து பெண்களின் உரிமை மற்றும் சுதந்திரத்திற்காக நர்கேஸ் முகமதி என்ற பெண் போராளி பல்வேறு கட்ட போராட்டங்களை முன்னெடுத்தார். அந்நாட்டு அரசால் 13 முறை கைது செய்யப்பட்ட நர்கேஸ் முகமதிக்கு 31 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், சிறையில் உள்ள நர்கேஸ் முகமதிக்கு நடப்பாண்டு அமைதிக்கான நோபல் பரிசு வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளது.



## சமத்துவத்தின் சிலை

அம்பேத்கரின் நினைவை போற்றும் வகையில் அமெரிக்காவின் மேரிலேண்ட் மாகாணத்தின் அக்கோகீக் நகரில் 13 ஏக்கர் பரப்பளவில் அம்பேத்கர் சர்வதேச மையம் கட்டப்பட்டு வருகிறது. இந்த மையத்தில் அம்பேத்கரின் முழு உருவ சிலை திறந்து வைக்கப்பட்டுள்ளது. இந்த சிலைக்கு "சமத்துவத்தின் சிலை" என்று பெயரிடப்பட்டுள்ளது. இந்த சிலை 19 அடி உயரம் கொண்டது.





# போதை உனக்கு பாதையல்ல !

டி.பிரவினா, இ.பிரவீனா
உளவியற்துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

சமூகத்தின் அமைதியான இருப்பை கேள்விக்குறியாக்கக்கூடிய சமூக, உள, ஆன்மீகப் பிரச்சனைகளில் ஒன்றாக போதைப்பொருள் பாவனை காணப்படுகின்றது. இப்போதைப் பொருள் பாவனையானது வருடா வருடம் தவறாது உயர்ந்து கொண்டே செல்வதனை United Nations office on Drugs and Crime (UNOD) இனுடைய அறிக்கையின் ஊடாக அவதானிக்க முடிகின்றது. மேலும் 2030ம் ஆண்டாகும் போது வருமானம் குறைந்த நாடுகளில் போதைப்பொருள் பாவணையாளர்களின் எண்ணிக்கை தற்போதைய எண்ணிக்கையை விட மேலும் 43% அதிகரிக்கும் எனவும் நடுத்தர வருமானம் குறைந்த நாடுகளில் தற்போது காணப்படும் அளவினை விட மேலும் 10% அதிகரிக்கும் எனவும் எதிர்வு கூறப்பட்டுள்ளது. 2019 ஆம் ஆண்டு தரவுகளின் படி இலங்கை போதை பொருள் பாவனையில் உலகளாவிய ரீதியில் நான்காவது இடத்தை பெற்றுள்ளது.

மேலும் இப்போதைப்பொருள் பாவனைக்கு அடிமையானவர்களில் பெரும்பாலானவர்கள் கட்டிளமைப் பருவத்தை ஒட்டிய பாடசாலை மாணவர்கள் ஆவர். இப்போதைப் பொருட்களில் பல வகைகள் காணப்படுகின்றன. மதுபானம், புகையிலை, அபின், ஹெராயின், கஞ்சா, பான்மசாலா, கொக்கைன், எதனால், நிகாட்டின் போன்றவை ஆகும். மேலும் இப்போதைப்பொருட்கள் உள்ளிழுத்தல், ஊசி மூலம் ஏற்றுதல், உட்செலத்துதல், நாக்கின் கீழ் வைத்தல், தோலின் ஊடாக உறிஞ்ச

வைத்தல் போன்ற முறைகளின் மூலம் நுகரப்படுகின்றது.

போதைப் பழக்கத்தை பல காரணிகள் தூண்டுகின்றன. போதைப் பொருட்கள் குறித்து கேள்விப்படும் தகவல்கள் மூலம் இளைஞர்கள் அதிகம் ஈர்க்கப்படுகிறார்கள். **'அதில் என்னதான் இருக்கிறது பார்த்து விட வேண்டும்'** என்ற ஆர்வம் இவர்களை தூண்டுகின்றது. மேலும் பிறரிடம் இருந்து கற்றுக் கொள்கின்றனர். போதை பொருள் பாவனைக்கு முக்கிய காரணமாக அமைவது புறக்கணிப்பு ஆகும். குடும்பத்தினராலோ, சமூகத்தாலோ புறக்கணிக்கப்படுபவர்கள் தற்காலிக மகிழ்ச்சிக்காக போதைப் பழக்கத்தை நண்பர்களாக்கிக் கொள்கின்றனர்.

போதைப் பொருட்கள் மத்திய நரம்பு மண்டலத்தின் செயற்பாடுகளையும், மனித செயற்பாடுகள் மற்றும் மனநிலையை பாதிக்க கூடியவையாக காணப்படுகின்றன. இதன் மூலம் போதைப் பொருள் பாவனையினால் ஏற்படுகின்ற பாதிப்புகளை நோக்கும்போது முதலில் மரணம், தற்கொலை முயற்சி, தன்னைத்தானே



காயப்படுத்தல், மூளை நரம்புத் தொகுதி நிரந்தரமாக பாதிக்கப்படல், இதய அமுக்கம், மூச்சுவிடல் பாதிப்பு, நாக்கின் சுவை அரும்புகள் பாதிக்கப்படல் , இரப்பை புற்றுநோய், வயிற்றுப் புற்றுநோய், காயங்கள் விரைவில் குணமடையாமை போன்ற உடல் ரீதியான பாதிப்புக்களை போதைப் பொருள் பாவனை ஏற்படுத்திவிடுகின்றது.

போதைப்பொருள் பாவனையினால் ஏற்படும் உளவியல் பாதிப்புகளாக சிந்தனைப் பிறழ்வு ஏற்படல், பிரம்மைகள் தோன்றுதல், தீர்மானம் எடுக்கும் ஆற்றல் குறைவடைதல், உணர்ச்சிகளை கட்டுப்படுத்த முடியாமை, சந்தேக மனப்பான்மை ஏற்படல் , மறதி ஏற்படல் அதாவது மூளையில் உள்ள கலங்கள் மதுவினால் நிரப்பப்படுவதனால் தகவல்களை சேகரித்து வைக்க கூடிய கலங்கள் அதன் செயல்களை இழக்கும். அதே போன்று தாழ்வான சுயமதிப்பீடு ஏற்படல் போன்ற உளரீதியான பாதிப்புகளை ஏற்படுத்துகின்றது.

போதைப் பொருள் பாவனையினால் ஏற்படும் குடும்ப ரீதியான பாதிப்புகளாக குடும்பத்தவர்களுடைய வெறுப்புக்கு ஆளாதல், குடும்ப பொறுப்புகளை எடுத்து முடியாத நிலைக்கு தள்ளப்படுதல், பிள்ளைகள் போதையாளரை வெறுப்பவர்களாக அல்லது அவர்களை பின்பற்றுவர்களாக காணப்படுதல்,பிள்ளைகளுடைய கற்றல் செயல்பாடு பாதிக்கப்படல், பொருளாதார ரீதியான

பின்னடைவினை குடும்பத்தினர் எதிர்நோக்குதல் போன்ற பல்வேறுபட்ட குடும்ப ரீதியான பாதிப்புகள் ஏற்படுகின்றது.

போதைப் பொருள் பாவனையினால் ஏற்படும் சமூக ரீதியான பிரச்சனைகளாக குழு மோதல் ஏற்படல், பொது சொத்துக்களை சேதமாக்குதல், சிறுவர் துஷ்பிரயோகம் அதிகரித்தல், வீட்டு வன்முறை செயல்கள் அதிகரித்தல், விபத்துக்கள் அதிகரித்தல், குற்றச் செயல்கள் அதிகரித்தல் போன்ற பல சமூக பாதிப்புகளையும் போதைப்பொருள் பாவனை ஏற்படுத்திவிடுகின்றது.

### ஐஸ் போதை பொருளுக்கு அடிமையானவர்கள்

ஐஸ் போதை பொருளின் தாக்கங்கள் பொதுவாக போதைப்பொருளைப் பயன்படுத்துவதில் பாதுகாப்பான நிலை இல்லை. எந்தவொரு மருந்தின் பயன்பாடும் எப்போதும் சில ஆபத்தைக் கொண்டுள்ளது. எந்த வகையான மருந்துகளையும் எடுத்துக் கொள்ளும்போது கவனமாக இருப்பது முக்கியம். ஐஸ் போதை பொருளின் தாக்கங்கள் 12 மணி நேரம் வரை நீடிக்கும், ஆனால் மருந்தைப் பயன்படுத்திய பிறகு சில நாட்களுக்கு தூங்குவது கடினமாக இருக்கலாம். ஐஸ் போதை பொருள் ஒவ்வொருவரையும் வித்தியாசமாக பாதிக்கிறது, ஆனால் விளைவுகள் பின்வருவனவற்றை உள்ளடக்கியிருக்கலாம்:

1. மகிழ்ச்சி மற்றும் நம்பிக்கையின் உணர்வுகள்
2. அதிகரித்த விழிப்புணர்வு மற்றும் ஆற்றல்
3. திறந்த மற்றும் உலர்ந்த வாய்
4. பற்கள் நறுமுதல் மற்றும் அதிக வியர்த்தல்
5. வேகமான இதய துடிப்பு மற்றும் சுவாசம்
6. குறைந்த பசி
7. அதிகரித்த பாலுந்தல்
8. ஊசி மருந்துகளை உட்கொண்டால், அதிக
9. தொற்று,நரம்பு சேதம்,எச்.ஐ.வி மற்றும் எய்ட்ஸ்
10. மூக்கின் சுவாச பாதையை சேதப்படுத்தும் மற்றும்
11. மூக்கில் இரத்தப்போக்கு ஏற்படலாம்.

### ஐஸ் போதை பொருள் பாவனையின் குறுகிய கால தாக்கங்கள்

1. அதிரித்த இதய துடிப்பு மற்றும் நெஞ்சு வலி
2. சுவாச பிரச்சனைகள்
3. தளர்சியான அல்லது கட்டுப்பாடற்ற அசைவுகள்
4. தீவிர கிளர்ச்சி, குழப்பம், கூச்சம்
5. திடீரென கடுமையான தலைவலி
6. மயக்கம்



7. பக்கவாதம், மாரடைப்பு அல்லது சில சமயம் இறப்பு.
8. தூங்குவதில் சிரமம் மற்றும் சோர்வு
9. மங்கலான பார்வை
10. சித்தப்பிரமை, பிரமைகள் மற்றும் குழப்பம்
11. எரிச்சல்


### ஐஸ் போதை பொருள் பாவனையின் நீண்ட கால விளைவுகள்

1. பசியின்மை காரணமாக தீவிர எடை இழப்பு
2. அமைதியற்ற தூக்கம்
3. உலர் வாய் மற்றும் பல் பிரச்சினைகள்
4. சளியுடன் காய்ச்சல்
5. கவனம் செலுத்துவதில் சிக்கல்
6. மூச்சுத்திணறல்
7. தசை விறைப்பு
8. கவலை, சித்தப்பிரமை மற்றும் வன்போக்கு
9. மனச்சோர்வு
10. இதயம் மற்றும் சிறுநீரக பிரச்சினைகள்

### உள பிரச்சனைகள்

சித்தப்பிரமை, மாயத்தோற்றம் மற்றும் வினோதமான, வன்முறை நடத்தைகளால் மாணவர்கள் பாதிக்கப்படுகிறார்கள். ஒரு நபர் ஐஸ் போதை பொருளினை பயன்படுத்துவதை நிறுத்திய சில நாட்களுக்குப் பிறகு இந்த அறிகுறிகள் பொதுவாக மறைந்துவிடும். தொடர்ந்து ஐஸ் போதை பொருளினை பயன்படுத்துபவர்கள் விரைவில் மருந்தைச் சார்ந்து இருப்பார்கள். வேலை செய்தல், படிப்பது மற்றும் பழகுவது போன்ற அவர்களின் இயல்பான செயல்களுக்கு ஐஸ் போதை பொருளினை தேவை என்று அவர்கள் உணரலாம்.

ஐஸ் போதை பொருளினை வழக்கமாகப் பயன்படுத்தும் மாணவர்கள் அன்றாட நடவடிக்கைகளில் குறைவான மகிழ்ச்சியை உணர ஆரம்பிக்கலாம். அவர்கள் எளிதில் மன அழுத்தத்திற்கு ஆளாகலாம் மற்றும் அவர்களின் மனநிலைகள் மிக விரைவாக மாறுபடும். இந்த மாற்றங்கள் கவலை மற்றும் மனச்சோர்வுடன் நீண்ட கால பிரச்சனைகளுக்கு வழிவகுக்கும். ஐஸ் போதை பொருளினை பாவிப்பதை நிறுத்திய பின்பும் குறைந்தது பல வாரங்கள் அல்லது மாதங்களுக்கு இந்த விளைவுகளை உணரலாம். நீண்ட காலமாகப் பயன்படுத்திய பிறகு, அதைக் கைவிடுவது சவாலானது, ஏனென்றால் உடல் இது இல்லாமல் செயல்படப் பழக வேண்டும். திரும்பப் பெறுவதற்கான அறிகுறிகள் பொதுவாக ஒரு வாரத்திற்குப் பிறகு மெதுவாக மறைந்து, ஒரு





மாதத்திற்குப் பிறகு பெரும்பாலும் மறைந்துவிடும்.

## பெற்றோர்களின் கவனத்திற்கு

### 1. உங்கள் பிள்ளைகளிடம் பேசுங்கள்

போதைப்பொருள், மது பாவிப்பதால் ஏற்படும் உடல், உளவியல் மற்றும் சமூக பாதிப்புகளைப் பற்றி உங்கள் பிள்ளைகளுக்குச் சொல்லுங்கள்.

### 2. ஆவர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளியுங்கள்

உங்கள் பிள்ளைகள் தங்கள் பயங்களையும் அனுபவங்களையும் பகிர்ந்து கொள்ளும்போது, பொறுமையாகக் கேட்பவர்களாக இருங்கள்.
தீர்ப்பளிக்காமல் இருக்க முயற்சி செய்யுங்கள்.

### 3. போதைப்பொருளை எதிர்க்க உங்கள் பிள்ளையை ஊக்குவிக்கவும்.

அவர்கள் போதைப்பொருட்களுக்கு அடிமையாகமல் பாதுகாக்க வழிகளை செய்யுங்கள்.

### 4. முன்மாதிரியாக இருங்கள்

பொறுப்புள்ள பெற்றோராக இருங்கள். புகைபிடிக்கும் அல்லது போதைப்பொருளை பாவிக்கும் பெற்றோரின் குழந்தைகள் சிகரெட் அல்லது போதைப்பொருளுக்கு அடிமையாகும் வாய்ப்புகள் அதிகம்.

### 5. உங்கள் குழந்தைகளுடன் நேரத்தை செலவிடுங்கள்

உங்களுக்கும் உங்கள் குழந்தைக்கும் பாதுகாப்பான உறவு இருந்தால், உங்கள் பிள்ளை போதைப்பொருளுக்கு அடிமையாகாமலிருக்கும்

## உளவியல் சிகிச்சை முறைகள்

### 1. ஆசை மறுத்தல் பயிற்சி சிகிச்சை முறை

பொருளுக்கு அதாவது போதைப் அடிமையானவர்களுக்கு அவர்களுடைய குடும்பம் மற்றும் உடல் ரீதியாக ஏற்படுகின்ற பாதிப்பு நிலைமைகள் குறித்து விளங்கப்படுத்தி போதைப்பொருள் மீதான ஆசையினை மறுக்க செய்து அவர்களை போதைப் பொருள் பழக்கத்திலிருந்து மீட்டுக் கொண்டுவரும் ஓர் உளவியல் சிகிச்சை இதுவாகும்.

### 2. வெகுமதி முறை.

இதனை உங்களுக்கு விளங்கும் வகையில் கூறின் ஒருவர் ஓர் நாளைக்கு 5 சிகரட்டினை பாவிப்பவராக இருப்பின் அதனை நான்காக குறைக்கும் போது அவருக்கு ஏதாவது ஒரு பரிசு பொருளை வெகுமதியாக வழங்குவதன் மூலம் போதைப் பொருள் அடிமையிலிருந்து படிப்படியாக அவரை குணப்படுத்த முடியும் . இதுவே வெகுமதி அளித்தல் சிகிச்சை முறையாகும்.

### 3. வெறுப்பூட்டல் சிகிச்சை முறை

அதாவது குறித்த நபர் போதையை உள்ளெடுக்க முற்படும் போது வெறுப்பூட்டும் நிகழ்ச்சிகளை ஞாபகப்படுத்துவதன் மூலமாகவோ அல்லது போதைப் பொருளை உள்ளெடுக்கும் போது அதனோடு

வாந்தி மாத்திரைகளை கலந்து கொடுப்பதன் மூலம் குறித்த நபருக்கு போதைப் பொருள் குறித்து வெறுப்பூட்டலை ஏற்படுத்தி போதைப்பொருள் பாவனையை குறைக்கும் ஓர் சிகிச்சை முறையாக இது காணப்படுகின்றது . உதாரணமாக போதைப் பொருளை பாவிப்பதனால் ஏற்படும் உடல் பாதிப்பை வெளிப்படுத்தக்கூடிய வீடியோ காட்சிகளை, படங்களை காட்டுவதன் மூலம் போதைப் பொருள் குறித்து வெறுப்பூட்டலை ஏற்படுத்தி போதைப் பொருளிலிருந்து மீண்டுவரச் செய்யமுடியும்.

### 4. அறிகை சிகிச்சை முறை

போதைப் பொருள் தொடர்பாக சில தவறான அறிகைகள் போதை மீதான நாட்டத்தை ஏற்படுத்தும் உதாரணமாக போதைப் பொருட்கள் உடலுக்கு உற்சாகமளிக்கும், கவலைகளை மறக்கச் செய்யும், உடலை சுறுசுறுப்பாக இயங்க வைக்கும், உடல் களைப்பை குறைக்கும் இவ்வாறான தவறான அறிவுக் கருத்துக்களை அறிகை சிகிச்சையின் ஊடாக மாற்றி அமைத்துக் கொள்ளமுடியும் . ஆகவே போதைப் பொருள் பாவனையானது உடல், உளம் . சமூக ரீதியாக எவ்வாறு பாதிப்புகளை எதிர்கொள்ள வேண்டிவரும் என்கின்ற யதார்த்த ரீதியான விடயங்களை கற்றுக் கொடுப்பதற்கு அறிக்கை சிகிச்சை முக்கியத்துவம் பெறுகின்றது.

### 5. Token Economy

ஒரு பொருளின் பாவனையை ஒரு குறிப்பிட்ட நேரத்துக்கு தொடர்ச்சியாக மேற்கொள்ள செய்து வெறுக்க வைத்தல் முறை இதுவாகும் உதாரணமாக ஒரு மணித்தியாளத்துக்குள் அளவுக்கு அதிகமான சிகரெட்டுகளை பிடிக்கச் செய்து அதனை வெறுக்க செய்தலாம் . இச்சிகிச்சை முறையும் போதைப்பொருள் பாவணையில் இருந்து அவர்களை மீட்டெடுப்பதற்கு உதவி புரிகின்றது.

இவற்றினை விட குடும்ப உள ஆற்றுப்படுத்தல் சிகிச்சைமுறை, குழு சிகிச்சைமுறை , போதை பொருளுக்கு அடிமையானவர்களை மீட்டுக் கொண்டு வருவதற்காக உடல், உள ஓய்வு பயிற்சிகளை வழங்குதல், போதைப் பொருள் பாவனையிலிருந்து சரியான முறையில் வெற்றி கண்ட நபர்களுடைய வாழ்க்கை கதைகள் மற்றும் அனுபவங்களை காட்சிப்படுத்தல் போன்ற உளவியல் முறைகளை பயன்படுத்துவதன் மூலமாக போதைப் பொருளுக்கு அடிமையானவர்களை படிப்படியாக குணப்படுத்தி சாதாரண வாழ்வியலுக்கு அவர்களை கொண்டுவர முடியும்.



# மூளைசாலிகள் வெளியேற்றமும் மருத்துவக்கல்வியின் எதிர்காலமும்



ப. டியனி

சுகாதாரத்துறை நெருக்கடியில் உள்ளது. வைத்தியர்களும் சுகாதார உத்தியோகத்தர்களும் தொடர்ந்தும் நாட்டை விட்டு வெளியேறிய வண்ணம் இருக்கின்றார்கள். உலக சுகாதார நிறுவனமானது (2010) தனது சுகாதார உத்தியோகத்தர்களுக்கான சர்வதேச ஆட்சேர்ப்பு தொடர்பான உலகளாவிய நடத்தை விதித்தொகுப்பில் குறிப்பிடப்பட்டிருப்பதாவது, "அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளின்" (பக்கம்.7) சுகாதார உத்தியோகத்தர்களை தொடர்ந்தும் ஆட்சேர்ப்பு செய்வதை உற்சாகப்படுத்தாமலிருக்கும் அதேவேளை, "புவியியல் ரீதியான சுகாதார உத்தியோகத்தர்களின் சமமற்ற விநியோகத்தை கருத்திற்கொண்டு அவர்களை வசதி வாய்ப்புகள் குறைவான பிரதேசங்களில் தக்கவைப்பதற்கான ஆதரவை வழங்க வேண்டும்" (பக்கம்.8).

சுகாதாரத்துறையில் நிலவும் மூளைசாலிகளின் வெளியேற்றம் குறிப்பாக வைத்தியர்களின் திரளான குடிபெயர்வை தடுக்க அரசாங்கம் என்ன செய்கின்றது? இந்த ஆக்கம் மருத்துவத்துறையில் நடைபெறும் குடிபெயர்வை ஊக்குவிக்கக்கூடிய அரசாங்கத்தின் கொள்கைகள் மற்றும் முன்மொழிவுகள் மீதான அவதானத்தை செலுத்துவதோடு பாரியளவிலான மாற்றங்களின் தேவைப்பாட்டை உணர்த்துகின்றது.

## நகர்ப்புற ~ கிராமப்புற ஏற்றத்தாழ்வுகள்

நாட்டின் 13.3% மான நிலப்பிரதேசத்தையும் 5% மான சனத்தொகையையும் கொண்டுள்ள வடமாகாணமானது, அரசதுறையை சேர்ந்த 5%மான மருத்துவ நிபுணர்களையும்

வைத்தியர்களையும் கொண்டுள்ளது. சதவீதத்தை பொறுத்தவரை இப்பகிர்வானது நியாயமானதாகக் காணப்பட்டாலும் நிலப்பரப்பை வைத்து பார்க்கும் போது வைத்திய நிபுணர்கள் பரவிக்காணப்படுவதோடு கிராமப்புறங்களை சேர்ந்தவர்கள் மருத்துவ உதவிகள் பெறுவதற்காக நீண்ட தூ ரங்களை கடக்க வேண்டியுள்ளது. மறுதலையாக 11.2%மான நாட்டின் மக்கள்தொகையையும் வெறும் 1.08% நிலப்பரப்பையுமே கொண்ட கொழும்பு நகரமானது கிட்டத்தட்ட அதன் சனத்தொகையின் இரு பங்கான மருத்துவ நிபுணர்களை (கிட்டத்தட்ட நாட்டின் கால்வாசி வைத்தியர்களை) கொண்டுள்ளது. இந்த ஏற்றத்தாழ்வுகள் ஏனைய மருத்துவ வேலைத்தொகுதிகளிலும் காணப்படுவதோடு மருத்துவ மூளைசாலிகள் வெளியேற்றமானது அதிகமாக கிராமப்புற மக்களையே பாதிக்கின்றதென புள்ளிவிபரங்கள் கூறுகின்றன.

***(அரச துறையில் காணப்படும் மருத்துவ நிபுணர்கள் மற்றும் மருத்துவர்களின் பகிர்வு வீதம்– 2019)***

### ஏனைய நாடுகள் இவ்வாறான நெருக்கடிகளின் போது என்ன செய்திருக்கின்றன?

தாய்லாந்தில் இவ்வாறான சூழ்நிலை ஏற்பட்டபோது கிராமப்புறங்களில் வைத்தியர்களை தக்கவைக்க பல கொள்கைகளை அறிமுகப்படுத்தியிருக்கின்றார்கள். 1960 களிலிருந்தே நடைமுறைப் படுத்தப்படும் அரசாங்க பிணைகள் திட்டமானது குறிப்பிட்ட காலம் வரை வைத்தியர்களை கிராமப்புறங்களில் சேவை செய்ய நிர்ப்பந்திப்பதோடு, இல்லாத பட்சத்தில் பிணையை வழங்கும்படியாக வடிவமைக்கப் பட்டிருக்கின்றன. மேலதிகமாக, சுகாதார மற்றும் கல்வி அமைச்சுகளும், கிராமப் புறங்களிலிருந்து பொதுப் பரீட்சைகளில் போதுமான புள்ளிகளோடு தேர்ச்சியடையாத மாணவர்களை பட்டப்படிப்பின் பின்னர் கிராமப்புறங்களில் மருத்துவ சேவையை தொடரும் தேவைப்பாடுகளோடு மருத்துவ கற்கைநெறிகளில் இணைக்கின்றன. இவ்வாறான தேவைப்பாடுகளோடு கற்று வெளியேறும் வைத்தியர்கள் தாய்லாந்தில் கிட்டத்தட்ட 30%ஆனோர் காணப்படுவதோடு இவர்கள் குறித்த கால எல்லையை தாண்டியும் தமது சேவைகளை தொடர்ந்த வண்ணம் இருக்கின்றார்கள்.

இதைப்போல, கிராமப்புறங்களை மையமாகக் கொண்டு வடிவமைக்கப்பட்ட மருத்துவ கற்கைநெறிகள், பொது சுகாதாரம் மற்றும் முதனிலை பராமரிப்பை அழுத்தமாகக் கொண்ட பாடநெறிகள்,



கிராமப்புறங்களில் அமைக்கப்படும் பயிற்சிகள், தாய் மொழியில் வழங்கப்படும் கற்கைநெறிகள் என சுகாதார உத்தியோகத்தர்களை தக்கவைக்கும் ஏனைய நிகழ்ச்சி நெறிகளும் இங்கு காணப்படுகின்றன. இதற்கு மேலதிகமாக கிராமப்புறங்களில் சேவையாற்றுவதை ஊக்குவிக்கும் நோக்கில் சிரமங்களுக்கான கொடுப்பனவு, மிகைநேர கொடுப்பனவு மற்றும் இன்னோரன்ன தொழில் அபிவிருத்தி வாய்ப்புகளும் காணப்படுகின்றன. இவ்வாறான ஏற்பாடுகளின் பின்னணி மற்றும் தூரநோக்கு சுகாதார வாய்ப்பு வசதிகளை கிராமப்புறங்களுக்கும் வாய்ப்பாக்குதலே அன்றி சுகாதார உத்தியோகத்தர்களின் சேவையை வரையறுப்பதற்கல்ல.

இதற்கு முரணாக, இலங்கையில் மேற்கொள்ளப்படும் கொள்கைகள் சுகாதார உத்தியோகத்தர்களை குடிபெயர்க்கும் படியாக இருக்கின்றன. உண்மையில், தற்போது முன்மொழியப்பட்டுள்ள பாதீடானது, கிராமப்புறங்களில் சுகாதார உத்தியோகத்தர்களை தக்கவைக்கும் கொள்கைகளை



பலவீனப்படுத்தும்.

இலங்கையில் இலவசக்கல்வியை பெறும் மருத்துவ பட்டதாரிகளுக்கு பிணைகள் காணப்படுவதில்லை. அதாவது, இளம் மருத்துவர்கள் பட்டம் பெற்ற பின்னர் அதிக வாய்ப்புகள் உள்ள நாடுகளுக்கு குடிபெயர்ந்து, அந்நாடுகளிலுள்ள பரீட்சைகளை தோற்றி அந்நாட்டில் சேவையை தொடர இருமுறைகள் யோசிக்க வேண்டியதில்லை. மேலும் மருத்துவத்துக்கான பட்டப்பின்படிப்பு நிலையமானது (PGMI), நிலையத்தின் சான்று பெறும் பொருட்டு காலனித்துவ கொள்கைகளை கைக்கொண்டிருப்பதோடு விசேட நிபுணர்கள் தேர்ச்சிபெற குறிப்பிட்ட காலம் வெளிநாட்டு பயிற்சியை, (பொதுவாக உயர் வருமானம் பெறும் நாடுகளில்) பெற்றிருக்க வேண்டுமென்ற நிபந்தனையை விதித்திருக்கின்றது. சுகாதார அமைச்சானது இத்தகைய பயிற்சிகளுக்கு பிணைகளுடன் கூடிய உதவித்தொகை வழங்குவதோடு இத்தகைய பயிற்சிகளை செலவு குறைந்த, மருத்துவ குடிபெயர்வுகளுக்கு அதிகமாக விரும்பப்படாத, தொழிநுட்பங்கள் வளர்ந்துவரும் தென்கிழக்காசிய நாடுகளில் மேற்கொள்ள அனுமதிக்க முனையலாம்.

மூன்றாவதாக, தற்போது இலங்கை மருத்துவ சங்கத்தின் (SLMC) சான்றளிப்பு அங்கமானது மருத்துவ கற்கைக்கான உலக ஒன்றியத்தின் (WFME) உள்நாட்டு சான்றளிப்பு முகவராக ஆகும்

முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றது. இதன் இணையதளத்தில் குறிப்பிட்டுள்ளதாவது, மருத்துவ கற்கைக்கான உலக ஒன்றியத்தின் சான்று பெற்ற நிலையங்களில் கல்விகற்று வெளியேறும் பட்டதாரிகள் WFME சான்றை ஏற்கும் பட்டப்பின்படிப்புகளை தொடர முடியுமாயிருப்பதோடு அந்தந்த நாடுகளில் தொழில்வாய்ப்புகளை பெற ஏதுவாகவும் அமையலாம்.

இருப்பினும், சர்வதேச தர நியமங்களுக்கேற்ப மருத்துவ கர்கைநெறிகளை வடிவமைப்பதானது உள்நாட்டுக்கு தேவையான விடயங்களை புறக்கணிக்கும் நிலைக்கு கொண்டுவந்துள்ளது. உதாரணமாக, 2018ல் வெளியிடப்பட்ட SLMCயின் மருத்துவ கல்வியின் குறைந்தபட்ச தரங்களில், கிராமப்புறங்களில் மருத்துவ பயிற்சிகளை பெற்றிருப்பது காணப்படவில்லை, எனினும் பல மருத்துவர்கள் தமது முதல் நியமனங்களை கிராமப் புறங்களிலேயே பெறுகின்றார்கள்.

அநேகமாக சர்வதேச நாணய நிதியத்தின் அறிவுரைகளின் படியே அரச துறைக்கான மருத்துவ நியமனங்கள் நிறுத்தப் பட்டிருக்கின்றன. இக்கொள்கை எத்தனை தூரம் சுகாதாரத்துறைக்கு பாதிப்பானதாக அமையக் கூடும் என்பதை நிர்ணயிக்க முடியாமல் இருப்பதுடன், எதிர்காலத்தில் பொதுத்துறையில் மருத்துவர் களுக்கான வேலைவாய்ப்பை உறுதிப் படுத்துவது அரசாங்கத்தின் கடமையாகும். இவ்வேலை வாய்ப்புகளை உறுதி செய்தல் மற்றும் பட்டப்பின் படிப்புகளுக்கான கற்கைகளை அரசாங்க அமைப்புகளில் தக்கவைப்பதானது, பொதுத் துறையில் மருத்துவர்களையும், மருத்துவ நிபுணர்களையும் ஈடுபடுத்துவதற்கும் தக்கவைப்பதற்குமான வாய்ப்பாக இருக்கின்றது. அரசியல்மயமாக்கம் காணப்படுதல், குறிப்பாக மாற்றலாகும் மருத்துவர்களின் பட்டியல்களில் அரச மருத்துவர்கள் சங்கத்தின் செல்வாக்கு இருத்தல், மேலும் இது போன்ற பல சிக்கல்களை விடுத்து, இந்த அமைப்பானது, புதிய மருத்துவர்களை கிராமப்புற நிலையங்களுக்கு சேவைகளில் அமர்த்த ஏதுவாயிருக்கின்றது. பொதுத்துறையில் மருத்துவ நியமனங்கள் நிறுத்தப்படுமாயின், வேலைவாய்ப்புகள் தொடர்பான நிச்சயமின்மைகள் உருவாவதோடு அதன் விளைவாக மருத்துவ மூளைசாலிகள் வெளியேற்றம் ஏற்பட வாய்ப்புகள் அதிகமாகும்.

## தனியார் மயப்படுத்தலும் கிராமப்புறங்களில் தக்கவைத்தலும்

இலங்கையில் மருத்துவக் கல்வியானது அரசின் மேற்பார்வையில் இயங்கும் வேளையில் 11 பீடங்கள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் (UGC) கீழும் ஒரு பீடமானது பாதுகாப்பு அமைச்சின் கீழும் இயங்குகின்றன. பல தசாப்தங்களாகவே ஆட்சிக்கு வந்த அரசாங்கங்கள் மருத்துவக்கல்வியை தனியார்மயமாக்கும் முயற்சிகளில்

ஈடுபட்டன. குறிப்பாக, பெற்றோர் அதிகமாக தம் பிள்ளைகள் மருத்துவக்கல்வியை தொடர வேண்டுமென விரும்பும் தென்னாசிய அமைப்பில், பட்டப்படிப்புகள் லாபகரமான தொழில்வாய்ப்புகளாக பார்க்கப்படுகின்றன. இன்னமும் இலங்கை எதிர்த்து வெற்றி கண்ட SAITM படுதோல்வி எம் நினைவுகளில் இருக்கக்கூடும்.

இருப்பினும் இலங்கை அரசாங்கங்கள் தனியார் மருத்துவ கல்லூரிகளை அமைக்கும் முயற்சியை கைவிடவில்லை. மாணவத் தலைவர்கள் மீதான தாக்குதல்களை தாண்டி SLMCயின் சான்றளிக்கும் பிரிவானது நாட்டின் அனைத்து மருத்துவ கல்லூரிகளையும் சான்றுபெரும் விண்ணப்பங்களை கோரியுள்ளது இருப்பினும் எந்த இடத்திலும் அரச பல்கலைக்கழகங்கள் குறிப்பிடப்படவே இல்லை. சான்றளிக்கும் பொறுப்பை ஒரு "தன்நிலையான" அமைப்பொன்றுக்கு வழங்குவதன் மூலம் அரசாங்கமானது UGCயின் தொந்தரவான நிர்வாக செயன்முறைகளை தந்திரமாக ஏமாற்றி மருத்துவ கல்வியின் மீதான வெளிநாட்டு முதலீடுகளை வரவேற்கின்றது. இந்நோக்கமானது 2018ல் வெளியிடப்பட்ட குறைந்தபட்ச தகுதி நிலைகளிலிருந்து வெளிப்படுகின்றது.

"இணைப்பினூடாகவோ அல்லது இரட்டை மருத்துவ கற்கை நெறிகளினூடாகவோ இலங்கைக்கு உள்ளேயும் வெளியேயும் காணப்படும் எல்லா அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகங்களும், நிலையங்களும், தமது மருத்துவ கற்கைகளை வழங்கும் நடைமுறையில் அட்டவணையில் குறிக்கப்பட்டுள்ள குறைந்தபட்ச தகுதிநிலைகளை பேணி நடக்க வேண்டும்."

மருத்துவக் கல்வியை தனியார் மயப்படுத்துவதானது, மருத்துவர்களின் மக்கள் கணிப்பியலை பொதுவாக நாட்டில் இருக்க திட்டமிடாத மேற்குடியை நோக்கி விலகலடையச் செய்யவல்லது. இம்மாற்றங்களுக்கு பங்களிக்கும் வகையில் அரசானது



வெளிநாட்டு கல்வித்தகுதிகளோடு வரும் மாணவர்களை மருத்துவகல்வி உட்பட கட்டணம் அறவிடப்படும் கற்கைநெறிகளுக்கு உள்நாட்டு பட்டப்படிப்பு கற்கைநெறிகளுக்குள் அனுமதிக்கும் முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றது.

ஏற்கனவே மருத்துவக் கல்லூரிகளில் அதற்கான வரையறுக்கப்பட்ட அனுமதிகள் காணப்படினும், வெளிநாட்டு கல்வித் தகுதிகளோடு நுழையும் மாணவர்களின் அனுமதியை அதிகரிப்பதானது ஏற்கனவே அழுத்தமாகியுள்ள அமைப்பொன்றில் உள்நாட்டு மாணவர்களின் அனுமதியானது சமாந்தரமான வகையில் குறைவதற்கான வாய்ப்புகள் அதிகமாகும். வெளிநாட்டு மாணவர்களின் அனுமதி நாட்டிலுள்ள மூளைசாலிகளின் வெளியேற்றத்தை குறைக்க எவ்வகையிலும் உதவியாக இராது.

2023க்கான பாதீட்டு முன்மொழிவுகளில் உயர்தர வணிகக்கல்வி, தொழில்நுட்பம், விஞ்ஞானம் மற்றும் கணிதத்துறை மாணவர்களின் திறமை அடிப்படையிலான அனுமதிகளை 40%த்திலிருந்து 50% வரை அதிகரிக்கும் திட்டங்கள் காணப்படுகின்றன. அதாவது, இவ்வாறான அனுமதிகள், வன்னி மற்றும் ஊவா போன்ற வசதிகுறைந்த மாவட்டங்களிலிருந்து மாவட்ட ஒதுக்கீட்டு அனுமதிகளின் மூலம் மருத்துவ கற்கைகளுக்கு தேர்வாகும் மாணவர்களின் எண்ணிக்கையை குறைக்கும். கிராமப்புறங்களில் இருந்து வரும் மாணவர்களே அதிகமாக கிராமப்புறங்களில் சேவைபுரியும் நிலையில் திறமை அடிப்படையிலான தேர்வானது கிராமப்புறங்களில் இருந்து வரும் மாணவர்களுக்கு பலமான அடியாக இருக்கப்போவதோடு மருத்துவக்கல்வியில் காணப்படும் ஏற்றத்தாழ்வுகளை மேலும் அதிகரிக்கும்.

## கசப்பான தோல்வி


ஏற்கனவே சுகாதரத்துறையானது பல நெருக்கடிகளுக்குள் சிக்கித்தவிக்கும் நிலையில், அரசாங்கத்தின் குறுகிய பார்வை கொண்ட கொள்கைகளை நடைமுறைப்படுத்த அல்லது அவற்றை முன்மொழிய அரசாங்கம் முயற்சிகள் மேற்கொள்வது மருத்துவ மூளைசாலிகள் வெளியேற்றத்தை மேலும் அதிகரிக்கும். கடுமையான வளத் தட்டுப்பாடுகளால் நெருக்கடிக்குள்ளாகியுள்ள பொது சுகாதார அமைப்பில் உலக வங்கி-சர்வதேச நாணய நிதியத்தின் அழுத்தங்களுடாக வலதுசாரி அரசாங்கத்தின் கீழ் பாரிய மாற்றங்கள் கட்புலனாகின்றன. ஏனைய நாடுகளிலிருந்து நாம் பாடம் கற்க வேண்டிய கட்டாயத்தில் இருப்பதோடு மருத்துவ மூளைசாலிகளின் வெளியேற்றத்தை கட்டுப்படுத்த அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுப்பதன் மூலம் சுகாதார ஊழியர்களை வசதிகுறைந்த பகுதிகளில் தக்கவைத்து கிராமிய சுகாதார அமைப்புக்கு நேரும் நெருக்கடிகளிலிருந்து நாட்டை பாதுகாப்போம்.



த.விதுர்ஷன்
மாணவன், கொழும்பு பல்கலைகழகம்.

# தற்கொலைகளால் தடமழியும் தலைமுறைகள் 2

பேச்சளவவில் நடைமுறை வாழ்வியலில் எம்மவர்கள் தற்கொலைக்கு போதியளவு முக்கியத்துவம் கிடையாதே!!! இலங்கையில் சராசரியாக வருடம் 3000 தற்கொலைகள் இடம்பெறுகிறது. அபிவிருத்தி அடைந்த தேசங்களில் இவ்வாறு இல்லையே! காரணம் அவர்களினுடைய வாழ்க்கை மகிழ்வானதாக, Happiness Index அதிகமானதாக காணப்படுகிறது.



ஆம் அவர்கள் கோழைகள் இல்லை எங்கேயோ வஞ்சிக்கப்பட்டவர்கள். இங்கே வாழ்வின் மீதான ஆசையை விட சாவின் மீதான பயங்களே பலரை வாழ வைக்கிறது. தற்கொலைகள் ஏற்கப்பட வேண்டியவையும் அல்ல, விமர்சிக்கப்பட வேண்டியவையும் அல்ல...

”மனம் ஏனோ சரியில்லை” என்று சொல்லும் போது அதற்கு தோள் கொடுக்கும் ஒரு குடும்பத்தையோ, நண்பர் வட்டத்தையோ கிடைக்கப் பெற்றவர்கள் அதிஷ்டசாலிகளே! குறைந்தபட்சம் அத்தகைய அத்தாட்சியாகவேனும் அருகில் இருப்பவருக்கு நாம் இருந்து விட முயற்சிக்க வேண்டும். ஒவ்வொரு தற்கொலைக்கும்

மறைமுகமாகவேனும் நாங்களும் காரணமாகிப் போகின்றோம்.

வாழத்தான் 1000 காரணங்கள் தேவைப்படுகிறது, மரணிக்க 1 காரணம் போதுமானதாக இருக்கிறது.

எமது சமூகத்தின் நாளாந்த காட்சி ஓட்டங்களை கண் முன்னே நிறுத்திப்பாருங்கள், நாம் இன்னொருத்தரை தாழ்த்தி வீழ்த்திப் பேசுவதா!!! புகழ்ந்து பாராட்டி பேசுவதா அதிகமாக இருக்கிறது? இவைதான் நாள் போக்கில் ஒருவரின் எண்ண ஓட்டத்தில் தாழ்வு மனப்பான்மை குடிகொள்ள வழித் தடங்களாய் அமைகின்றன!! முடிந்தளவு நேரலைவுகள் (Positive Energy) யை பரவுதல் செய்ய வேண்டும், நல்ல சிந்தனைகளால் முற்போக்கான வாழ்வியல் நடைமுறைகளால் சமூகம் ஆசீர்வதிக்கப்பட நாம் அனைவரும் ஆவண செய்ய வேண்டும்.

தற்கொலை செய்து கொள்பவர்கள் கோழைகள், வாழத் தெரியாதவர்கள் என்றெல்லாம் இந்த சமூகம் ஏளனம் செய்கிறது. ஆனால், தற்கொலை என்பது எல்லாவற்றின் மீதும் நம்பிக்கை இழந்த பிறகு எஞ்சியிருக்கும் கடைசி விடுதலை தான். யாரும் முதலில் தற்கொலை வழியை தேர்ந்தெடுப்பதில்லை. அவர்கள் தற்கொலை செய்து கொண்டார்கள் என்று சொல்வதை விட, இந்த சமூக காரணிகளால் தற்கொலை செய்யும் நிலைக்கு தள்ளப்பட்டார்கள் என்பதே உண்மை. ஒருவர்,தன் பிரச்சினையை இந்த உலகிற்கு சொல்லும் பொழுது, ”இதெல்லாம் ஒரு பிரச்சனையா.. எனக்கெல்லாம்...” என்று உலகமும் சேர்ந்து சிரிக்கிறது..

”நான் அழகில்லையா” என்று கேட்டால், பரவாயில்லை என்ற ஆறுதலை விட, ”இப்ப தான் உனக்கே தெரியுதா” என்று கிண்டல் செய்கிறது...

”சரியாக படிப்பு வரவில்லை” என்று சொன்னால்,”படித்துத் தான் ஆக வேண்டும்” என்று கட்டளை இடுகிறது.

அவமானங்களை பற்றிக் சொன்னால் அதை சொல்லியே மீண்டும் மீண்டும் அவமானப் படுத்துகிறது.

கனவுகளை பற்றிச் சொன்னால் ”கிடைத்ததை வைத்து வாழ்” என்று மட்டம் தட்டுகிறது..

ஏதோ ஒன்றை நம்பிக்கையுடன் சொல்ல வந்தால் விலகி தூரம் ஓடுகிறது. ஆனால், உண்மையில் அவர் அவருக்கு அவன் அவன் பிரச்சினைகள் பெரிது. முதலில், பேச்சு தடைப்படுகிறது. மனிதர்கள்



தூரமாகிறார்கள். சில நேரங்களில் தனிமை கூட தொலைவாகிப் போகிறது..

ஆனால்,யாரோ ஒருவர் அவர்களின் பிரச்சினையை சில நிமிடங்கள் பொறுமையாக கேட்டிருப்பின் பல தற்கொலைகள் தவிர்க்கப் பட்டிருக்கும். சில நம்பிக்கை வார்த்தைகளை சொல்லி தேற்றி இருப்பின், வாழ்நாள் இன்னும் கொஞ்சம் நீண்டிருக்கும். அழுது தீர்த்து விட தோள் கிடைத்திருப்பின் சில காலம் ஒரு உயிர் இந்த உலகில் உயிரோடு இருந்திருக்கும். அப்படிப்பட்ட சில உறவுகளை/ நண்பர்களை எப்போதும் சமீபித்திருங்கள். சிக்கல்களை பிரச்சினைகளை கவலைகளை பகிர்ந்து கொள்ளுங்கள். நிறைய குறைபாடுகளுடன் கூடிய மனிதர்கள் நிரம்பியதே இந்த உலகம், எல்லோரையும் யாரோடும் ஒப்பிடாமல் முழுதாய் அப்படியே ஏற்றுக் கொள்ளும் போது, நிறைய தற்கொலைகள் தடுக்கப்படும்.



ஒவ்வொரு தற்கொலையின் போதும், “ஒரு மனிதன், இந்த சமூகத்தில் வாழ்வதை விடவும், கழுத்தை அறுத்தோ, உடலைச் சிதறடித்தோ செத்துப்போவது எளிதானது“ என்று எண்ணும் வகையில் நாம் உலகத்தை வைத்திருக்கிறோம் என்று சிந்திக்க வேண்டும்! பசிப்பவனுக்கு சோறு போட தயங்கும் உலகம் படுப்பதற்கு தலையணை கொடுத்து பிரியோசனம் இல்லை, பசி போனால்தான் தூக்கம் வரும்.

தற்கொலை என்பது தடுக்கப்பட வேண்டிய பொது சுகாதாரப் பிரச்சினை என்று உலக சுகாதார நிறுவனமே அங்கீகரித்துள்ள நிலையில், தற்கொலை எண்ணம் இருப்பவர்களை அடையாளம் கண்டுகொள்ள வழிவகைகள் உள்ளனவா என்ற வினா தொக்கி நிற்கையில்! தற்கொலை எண்ணமே வேண்டாம் என்ற விழிப்புணர்வு மேலோங்க செய்ய வேண்டும். எம்மை விட அறிவில் குறைந்த ஆடோ, மாடோ, ஓனானோ, பல்லியோ, காகமோ, குருவியோ தற்கொலை செய்வதில்லை, இவற்றை எல்லாம் விட அறிவாலும் ஆற்றலாலும் வலுத்த நாம் தற்கொலை செய்வது எத்தகைய கீழ்கோடல் விடயம். தன்னம்பிக்கை இழந்தவருக்கு சாவுதான் விடுதலை என்றால் நாள்தோறும் சடலங்கள்தான் காணக்கிடைக்கும். சமூக நெருக்கமாதல்தான் இதனை வெல்ல வழியாக அமையும் என்பதை நம்மவர் உணர வேண்டும்.

**தொடர்ந்து சிந்திப்போம்**




### சித்திராங்கதா திருமணம்

நல்லை நடுக்கூடத்தில் கவிழ்ந்திருந்த ஆடலரசியின் சிரம் அவையோரை நோக்கி நிமிர்ந்தது. அதீத வேகத்தில் அவள் விழிகள் விரிந்தன. நெற்றி சுருங்கியது. சித்திராங்கதாவின் அந்த தீவிர வதனத்தை எதிர்கொள்ளும் துணிச்சல் நல்லை அரசவையில் யாருக்கும் இருக்கவில்லை.

எல்லோரும் என்ன நடக்கப்போகிறது என்கிற ஆச்சரியத்தில் அமைதி காத்தனர். அனைவரினதும் சரீரங்கள் சிலிர்க்கும்படி சித்திராங்கதா சிரிக்கத் தொடங்கினாள். ரீங்காரமாய் ஓயாது ஒலித்த அவள் சிரிப்பொலி நல்லை அரசவையையே அந்தகணம் உரப்பியது. விடாது சிரித்தாள்.

அந்த சிரிப்பொலி அடங்க அடங்க அவையில் நிரம்பியது அனைவருக்குள்ளும் அந்த அமைதி ஒருவித அச்சத்தை விதைத்தது. ஒரு புயலிற்கு முந்தைய பூமியின் அமைதி எல்லோர் நினைவிலும் வந்து போனது.

சித்திராங்கதாவின் குரல் அவையை நிரப்பத் தொடங்கியது.

“சூழ்ந்து நிற்கிற வல்லோரே.. நல்லூரின் நல்லோரே... கேட்டீர்களா அரசரதும் அவர்தம் மணிக்கரமான மந்திரியாரது கதையையும். முந்தைய கணம் வரை இந்த தேசத்தின் கொடுங்குற்றவாளி.. பெண்வர்க்கத்தின் முதல் குற்றவாளி! ஈழத்தில் எந்தப் பெண்ணும் செய்யாத கொடும்பாவத்தை செய்த கொலைகாரி! இந்த கணந்தொட்டு நல்லை தேசத்தின் ஏக போக விருந்தாளி!” மீண்டும் அதே போல் சிரித்தாள்.

“என்னை இனிமேல் காவல் செய்ய போகிறதாம் நல்லை அரசு! யாரிடமிருந்து

யாரை காப்பது...? உயிரழிந்து கிடக்கும் பிணத்திற்கு வல்லூறுகள் காவலாம்...” அவள் சிரிப்பொலி மீண்டும் அவையோரை உரப்பியது.

அவளது அந்த கொடூர சிரிப்பையும் அதற்கிடையிலான அமைதியையும் பொறுத்துக் கொள்ள இயலவில்லை சங்கிலியனால்.

“பெண்ணே! சித்திராங்கதா.. தணலில் மெழுகாய் தவிக்கும் என் உள்ளத்தை உன் வார்த்தைகளால் மேலும் உருக்குலைக்காதே! தஞ்சைவீரர் மனம் அறியாமல் உன் மனம் நோக கரும மாற்றியது எம் தவறுதான். எம்மீதான குற்றங்களை ஏற்கிறோம். நிவர்த்திக்க ஒரு வாய்ப்பும் கேட்கின்றோம் உன்னிடம்..”

“ஆகா.. ஆகா! எத்தனை நல்லவர்கள் நீங்கள்! நல்லை மாந்தர் இந்த வேந்தனை மகத்தானவன் என்று நம்ப எதையும் எந்த நேரத்திலும் செய்ய தயங்கமாட்டார் என்பதை நான் அறியமாட்டேனா?”

சித்திராங்கதா இவ்வாறு கூறியதும் மஞ்சரிதேவியின் பதற்றம் அதிகரித்தது. அரசர் பக்கத்தில் நின்ற தேவி பொறுக்க இயலாமல் சித்திராங்கதாவின் அருகில் விரைந்து வந்தார்.

“பெண்ணே... இப்போதாவது கொஞ்சம் பொறுமை கொள்! அரசரிடம் பேரவையில் பேசுகிறோம் என்பதை நினைவில் அழிக்காதே.. நாட்டு குடிமகளாய் அரசரின் பேச்சை மதிக்கவேண்டியது உயிருள்ளவரை உன் கடமையே. விதி மீறாதே..”

“யாரது.. ? இந்த அவையின் புடவை கட்டிய புத்திசாலி மகாராணி மஞ்சரி தேவியா? இத்தனை நேரம் பொறுமையாக இந்த கூடத்தில் குற்றவாளியாய் கிடந்த சித்திராங்கதாவை உங்கள் கண்கள் காணவில்லையா தேவி? எல்லாவற்றையும் கண்டு கேட்டு மௌனங் காத்த மகாராணி இப்போது என்னிடத்தில் அமைதி கொள்ளச் சொல்வது நியாயமாகுமா? சற்றேனும் சிந்தியுங்கள் ராணி... இச்சந்நிதியில் நான் பட்ட பாட்டை தாங்கள் பெற்ற மகள் பட்டாலும் பேணிவீர்களா இவ்வமைதி.. பெண்ணான என்னை சிறைபடுத்தி விதி மீறலாம் அரசு என்றால் அப் பெண் அவையில் அவளிற்காக பேசுவது மட்டும் விதிமீறலா? சொல்லுங்கள் தேவி”

மஞ்சரிதேவி உட்பட்ட அவையே மௌனித்து நின்றது.

“அப்படி விதி மீறுகிறாள் சித்திராங்கதா என்றால் என்னை ஏன் விட்டுவைத்துள்ளீர்கள் இதுவரை! கொன்றுவிட வேண்டியது தானே! மாட்டீர்கள்! நீங்கள் பணயமாய் அனுப்பிய என்னவர் வந்து கேட்டால் என்ன பதில் சொல்வது என்கிற புது அச்சம் தானே தங்களை இப்படியெல்லாம் பேசவைக்கிறது . மாட்டேன்! வன்மத்தை

என் மீது கொட்டிய நல்லை அரசவை அதிகாரங்களிடத்தில் நான் மட்டும் நியதி அறிந்து அமைதி காக்க வேண்டுமா? முடியாது.. இப்பேரவையில் இனி என் பேச்சிற்குத் தான் இடமுண்டு"

அவள் கூறிய தொனி அங்கிருந்த அனைவரையும் ஆச்சரியப்படுத்தியது. மாருதவல்லி தொடர்மூச்சு வாங்கியபடி மஞ்சரிதேவியின் அருகில் சென்று தேவியின் கரங்களை இறுகப்பிடித்துக் கொண்டு நின்றாள். சித்திராங்கதாவின் பேச்சில் உள்ள நியாயத்தை உணர்ந்தது போல் சேனாதிபதி மகிழாந்தகனும் அமைதியாக தலைகுனிந்து நின்றான்.

"பெண்ணே சித்திராங்கதா! தவறு நடந்தது உண்மைதான் என்பதை யாரும் இங்கு மறுக்கவில்லை!" இராஜமந்திரியார் கனிவான குரலில் தன் ஆசனத்தை விட்டெழுந்து பேசினார்.

"ஆனால் உன்னை தண்டிக்க வேண்டும் என்ற நோக்கமும் வன்மமும் எம்முள் தங்கியிருந்ததாய் நீ கூறுவது உண்மையல்ல தாயே! உன்னைக் காவல் செய்ய கைது செய்யும்படி உன் தந்தையாரே அரசரிடம் கேட்ட போது கூட அதை மனம் விரும்பாது மறுதலித்து வந்தார் அரசர் இத்தனை நாளும்.. இப்போதும் சூழ்நிலை அச்சம் காரணமாகவே இப்படியொரு முடிவு எடுக்க நேர்ந்துவிட்டது. அரச சிம்மாசனத்தில் அமரும் வேந்தன் நாட்டில் நிகழ்வன கண்டு அவசரமாய் சில முடிவுகள் எடுக்க வேண்டியது கட்டாயமாகிறது. அதிலிருக்கும் தவறுகள் பற்றி சிந்திக்க அவகாசம் பலநேரம் வாய்ப்பதில்லை. காலமும் சூழ்நிலையுமே எல்லாவற்றிற்கும் காரணம். மாறாக நீ சொல்வது போல் அரசர் வன்மம் கொண்டு கருமமாற்றினார் என்பது தவறான குற்றச்சாட்டு என்பதை புரிந்து கொள் மகளே.."

"என் தந்தை சொன்னாரா...? என் தந்தை என்பதையும் தாண்டி அவர் தங்கள் அரண்மனை சேவகரல்லவா? எவனோ வந்து போனவன் வாய்ப்பறை கேட்டு நொந்து போய் நோயாளி ஆன என் தந்தை - மகள் நான் என்பதை மறந்து நாட்களாகி விட்டதே! அந்தளவு கொடும்பாவம் செய்த புத்திரி அல்லவா நான்! என்னை கைது செய்ய கட்டளையிட்ட தங்கள் பெருவணிகர்! அதற்காக என்மீது சுமத்திய குற்றம் தான் என்ன? அதை யாரேனும் உரைப்பீர்களா? கூறுங்கள்... ஈழத்தின் முதல் குற்றத்தை செய்துவிட்டு கைதான பெண் குற்றவாளி கேட்கிறேன்.. கடைசியாய் ஒரு முறை கேட்கிறேன்.. என்மீது சுமத்தப்பட்ட குற்றத்தை யாரேனும் என்னிடத்தில் தெரிவிப்பீர்களா?"

அவள் அனல் விழியால் புனல் வடித்தாள்.

நெகிழ்ந்த மனத்தினால் சங்கிலியன் தன் அமைதி கலைத்தான்.

"பெண்ணே...! தஞ்சை படை தளபதி வருணகுலத்தான் பறங்கியர் பக்கம் சாய துணை நின்றதாய் குற்றம்

உன்மீது. குற்றமற்றவள் நீ என்பதை தஞ்சைவீரரே தரணிக்கு இந்த மடல் மூலம் உணர்த்தி விட்டார். இனி இங்கு யாருக்கும் ஐயமென்பது கிடையாது. உண்மை தெளிந்தோம் நாம்..
இதில் குற்றமென்று இருந்தால் அது எம்மிடமே.. மங்கையரை கைது செய்யும் வழக்கமற்ற திருநாட்டில் இப்படியொரு துர்ச்செயலை அவசரமாய் ஆற்றிய நானே தற்சமயம் குற்றம் சுமந்து நிற்கிறேன். ஆதலினால்...” தன் இடையில் செருகியிருந்த வாளை உருவி உயர்த்திப் பிடித்தான் சங்கிலியன்.

“என் முன்னை வேந்தர்கள் சாட்சியாக கூறுகிறேன்! இதோ இந்த வாளின் மேல் ஆணையாக என் குற்றத்திற்காக ஆடலரசி சித்திராங்கதாவிடம் மன்னிப்பு கோருகிறேன்.. இந்த மன்னன் சங்கிலியனது களங்கத்தை போக்க வாய்ப்பு கொடு மகளே..” என்று தன் வாளினை அரண்மனை தரையில் வைத்தான் சங்கிலியன்.

“மன்னிப்பு வேண்டுமா? மாமன்னர் சங்கிலிய மகாராஜாவிற்கு இந்த அற்ப மங்கையிடத்தில் மன்னிப்பு வேண்டுமா?” துயரில் தோய்ந்த சிரிப்பு சித்திராங்கதா பேச்சில் தெரிந்தது.

“செய்த குற்றத்தின் சுமையை சிலநொடிகள் கூட பொறுக்கமுடியாமல் தவிக்கும் வேந்தரே! செய்யாத குற்றத்திற்காய் இத்தனைநாள் இந்த இழிவை தாங்கிய என் நிலையை எண்ணிப்பார்க்க இயலுமா தங்களால்... பெண்ணாய் பிறந்து ஆடற்கலையின் அதிரூபசுந்தரி என்று எண்ணியிருந்தவளை பெண் பிறவியிலே இழிபிறப்பாய் நல்லூர் எண்ணும்படி செய்தீர்களே.. இத்தனைநேரம் அத்தனை இழிமொழிகளையும் தாங்கி இந்தப்பேரவையில் தலை நிமிர முடியாத பாதகியாய் நின்றேனே அந்த வலி புரிகிறதா வேந்தே..” அவளது கண்ணீர் நல்லூர் அரசவையின் அத்தனை கண்களையும் ஈரமாக்கியது.

மீண்டும் அரசவையில் அதே அமைதி. கணநேரத்தில் என்ன நினைத்தாளோ தெரியாது. கண்ணீரைத் துடைத்து எழுந்தாள் சித்திராங்கதா.

“தேவையில்லை எதுவும் தேவையில்லை! என் இருதயவலி இங்கிருக்கும் எந்த இரு விழிகளிற்கும் புலப்படாது. என் வேதனை புரிந்த அந்த இரு விழிகளும் இவ்விடத்தில் இல்லை! தஞ்சை வீரர்!... தஞ்சை வீரரை தவறான வழிக்கு நடத்தியதாய் குற்றச்சாட்டு என்மீது. தவறான வழி! நானும் தஞ்சைவீரரும் சேர்ந்து சென்ற அந்த வழி நல்லை அரசிற்கு தவறான வழி! அவ்வாறே சொல்லி என்னை முதல்



பெண் குற்றவாளியாக்கி சபையில் நிறுத்தையில் இந்த நடனப்பெண்ணின் வழியே தன் தலைசிறந்த வழி என்று நாடு காக்க சென்ற என்னவர் தரணிக்கு நிரூபித்து காட்டிவிட்டாரே! அந்த மாவீரத்தின் மீதா நான் ஐயங் கொண்டேன்! இத்தனை நாள் அந்த மாவீரத்தின் மீதா கடுங்கோபம் கொண்டிருந்தேன்.... இந்தப்பேதை தன்நாட்டின் மீது கொண்ட அன்பை என்னவர் அறிந்திருப்பார் என்று என்மனம் இதுவரை நம்பவில்லையே.. அன்று புரவியில் எனக்களித்த வாக்கை மறந்து அதிகாரத்திற்கு அடிபணிந்து போரிற்கு சென்றுவிட்டார் என்று நான் கொண்ட தாபங்கள் அனைத்தையும் மிஞ்சி இன்று தன் காதலை சபையறிய சகலருக்கும் தெரிவித்து என் களங்கத்தை போக்கிய வீரருக்கு இணையாய் நான் செய்தது என்ன? எதுவுமேயில்லையே

இதோ... இதோ... இந்தப் பெட்டிக்குள் அவர் அனுப்பி வைத்தது எனக்கான மகுடமல்லவா? எந்த ஒரு கணத்தையும் கூட இனி நான் நம்பப் போவதில்லை. எந்தக் கணமும் எப்போதும் நான் நினைத்தது போல் இதுவரை நிகழவுமில்லை. எதற்காகவும் இனி நான் காத்திருக்கப் போவதில்லை. இதோ.... இதோ... இப்போதே.... இப்போதே...”

என்று அந்தப்பெட்டியை திறந்து அதற்குள் இருந்த முத்துமாலையை வாஞ்சையோடு தன் கரங்களில் பற்றினாள். கண்ணீர் நிரம்பிய அவள் கண்களில் தெரிந்த அந்த முத்துமாலையின் விம்பம் மாவீரன் வருணகுலத்தானையே அவள் தனக்குள் வாங்கிக் கொண்டாள் என்பதை உணர்த்தியது. அவள் கண்கள் அந்த நேரம் காட்டிய அபிநயம் அவளைத்தவிர எந்த ஆடலரசியாலும் இந்த உலகில் இதுவரை காட்டப்படாத அதிசயமாகும்.

“மாவிலை தோரணங்கள் கட்டி மணமேடையில் என் தந்தை கன்னிகாதானம் செய்ய என்னைக் கரம்பிடிக்க கடல் கடந்து வந்து காத்திருந்த மன்னவரே... இப்போது இந்த கூடத்திலே என்னை மணந்து கொள்ளுங்கள்...” என்று கூறி அந்த வெண்முத்து மாலையை தன் கரங்களினால் தானே அணிந்து கொண்டாள்.

சித்திராங்கதா வருணகுலத்தான் திருமணம் அக்கணமே நடந்தது. சித்திராங்கதாவின் பேச்சிலும் செயலிலும் உள்ள வேகம் சுற்றி நின்ற எல்லாரையும் வாயடைக்க செய்திருந்தது.

அருகில் நின்ற மகிழாந்தகனை வணங்கிய கரங்களோடு நோக்கினாள் சித்திராங்கதா.

“நல்லை தேசத்து சேனாதிபதி மகிழாந்தகரே.. தாமே இந்த மாலையை என்னவரிடத்தில் இருந்து கொண்டு வந்தீர். தாமே எம் திருமணத்தில் நித்திய சாட்சியுமாவீர்கள்! போரிற்கு சென்ற என்னவர் மீண்டு வருவார்.

நிச்சயம் வென்று வருவார்.. அவர் வருகின்ற நாளில் என்னவரிடத்தில் சொல்லுங்கள்..அவர் என்னை மணந்து கொண்ட செய்தியை என்னவரிடத்தில் தெரியப்படுத்துங்கள்!”

மகிழாந்தகன் கண்களும் நனைந்தன. “எதனால் இத்தனை அவசரம் பெண்ணே.. வீரத்தை பறைசாற்றி மாவீரர் வென்று வந்தபின் நல்லூரே வியக்க தங்களது திருமணம் நடக்க வேண்டியதல்லவா? இப்படி அவசரங் கொண்டது ஏன் பெண்ணே?...”

“இல்லை... சேனாதிபதியாரே.. காலத்தை இனி நம்பமாட்டாள் சித்திராங்கதா. மற்று இந்த அரசவையில் இருப்போரது பேச்சையும் இனி ஒரு போதும் நம்ப நான் தயாரல்ல.. என்னவரை மணந்து கொள்ள காத்திருக்கும் அவகாசம் என்னிடத்தில் இல்லை! பெருஞ் சபையோரே! என்னவர் வரும் நாளில் நல்லூரில் மிஞ்சி நிற்கும் நல்லோரே... அந்நாளில் அவரிடத்தில் தவறாமல் அவர் மனைவி ஆனாள் சித்திராங்கதா என்பதை தெரியப்படுத்துங்கள்! உங்களனைவரிடமும் இக்கன்னிகையின் கடைசி வேண்டுகோள் இதுவே”

அதன் அர்த்தம் புரியாமல் குழம்பித்தவித்தனர் அவையோர். அவையோரின் குழப்பத்தை போக்கும் அந்தக் கேள்வியை கேட்டார் மந்திரியார்.

“என் அருமைப் பெண் பாவாய்.. நீ பேசுவதன் பொருள் என்ன தாயே.. தஞ்சைவீரர் வரும் வரை தலைசிறந்த ஆடலரசி உன்னைக் காப்பது எம் நாட்டின் பெரும்பணி ஆகிவிட்ட நிலையில் தஞ்சைவீரர் வரும்போது தகவல் சொல்லும்படி நீ சொல்லுவதன் பொருள் என்ன ? வீரத்தளபதி வென்று வரும் போது வெற்றித்திலகமிடுவது அவர் ஆசைக்கன்னிகை உன் பணியல்லவா? அப்படியிருக்க நீ இப்படி கூறுவதன் பொருள் எமக்குப் புரியவில்லையே தாயே! இத்தனை நாள் நீ பட்ட துன்பங்கள் கரைகின்ற பொழுதில் உன் பேச்சிலும் செயலிலும் தெரியும் அவசரத்தின் அர்த்தம் என்ன தாயே.. உன் தந்தை ஸ்தானத்தில் நின்று கேட்கிறேன். என் மகளும் உன்னைப்போல் ஒருத்தியே! என் பேச்சைக் கொஞ்சம் கேளம்மா..”

“தந்தை ஸ்தானமா? என் தந்தையே தன் ஸ்தானத்தை மறந்து நிற்கையில் இனி யாரை தந்தை என்று நம்புவேன்.. என் காதலின் பெரிய எதிரி என்று நினைந்தவர் இப்போது எனக்கு தந்தை என்கிறார். எதற்காகவும் யார் பேச்சையும் இனி இந்த சித்திராங்கதா நம்பப் போவதில்லை.. இதே உதடுகள் தானே கடந்த கணத்தில் ஈழத்தின் துரோகி என்றது என்னை! அப்போதே முடிவை எடுத்துவிட்டாள் சித்திராங்கதா..”
தெளிவாய் ஒரு முடிவோடு தான் அவள் அவையில் பேசிக்கொண்டிருந்தாள்..

நம் ஆடலரசி எடுத்த அந்த முடிவுதான் என்ன?

காண்போம்....



# உளவியல் ஆய்வுகளில் எதிர்கொள்கின்ற சவால்கள்

சு.கிருந்திகா
உளவியல் துறை
யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம்

ஆய்வு என்பது அறிவு தேடலுடன் தொடர்புபட்டதாகும். இது மெய்மையை கண்டறியும் புலமைசார் பயிற்சியாகும். ஆய்வு என்பது தொடர்ச்சியான தேடலை முன்வைக்கின்றது. தேடல் தொடர்ச்சியாக இருப்பதனால் ஆய்வுக்கு முடிவில்லை. ஆய்வு என்பதை குறிக்கும் ஆங்கில பதமான Research என்பது தேடுதல் என பொருள் கொண்ட RESEARCHER என்ற பிரஞ்சு மொழிச் சொல்லின் வழி வந்ததாக கூறப்படுகின்றது. "The Advanced Learner's Dictionary of Current English" எனும் அகராதி ”எந்த ஓர் அறிவுத்துறையிலும் புதிய தகவல்களை குறிப்பாக தேடுவதற்கான கவனமான ஒரு பரிசீலனை அல்லது ஆராய்வு என்பதே ஆய்வு என்பதன் அர்த்தம்” என குறிப்பிட்டுள்ளது.

ஒவ்வொரு ஆய்விற்கும் அது மேற்கொள்ளப்படுவதற்கான நோக்கங்கள் காணப்படும். சில நேரங்களில் குறித்த ஆய்வுகளின் நோக்கங்களை அடைய முடியாது போகலாம். உளவியல் துறையில் ஆய்வுகள் மேற்கொள்ளப்படுவது என்பது பின்வரும் காரணங்களால் முக்கியத்துவம் பெறுகின்றது.

1. உளவியல் துறையானது ஒரு விஞ்ஞானம் என்பதை நிஷரூபிக்க ஆய்வு முக்கியமாகும்.

2. உளவியலானது அபிவிருத்தி அடைந்து வரும் துறையாதலால் உளவியலில் ஆய்வுகள் முதன்மைப்படுகின்றன.

3. மனித நடத்தைகளையும் அவற்றுக்கான விளக்கங்களையும் ஆதாரப்பூர்வமாக விளக்குவதற்கு உளவியல் ஆய்வுகள் அவசியமாகும்.

4. பொதுவான உளவியல் கொள்கைகளுக்கும் இயல்பான அல்லது தற்கால நிலைகளுக்கும் இடையிலான இடைவெளியை புரிந்து கொள்வதற்கும் ஆய்வு அவசியமாகும்.

இவ்வாறு உளவியல் துறையில் ஆய்வுகள் மிக முக்கியமான இடத்தை பெறுகின்றன. ஆனாலும் ஏனைய துறைகளோடு ஒப்பிடுகையில் உளவியல் துறையில் ஆய்வுகளை மேற்கொள்வதில் பல்வேறுபட்ட சவால்கள் காணப்படுகின்றன.

**ஆய்வாளன் சார்ந்த பிரச்சனைகள்**

உளவியல் ஆய்வுகளின் மேற்கொள்கின்ற ஆய்வாளன் சார்ந்தும் பல்வேறு பிரச்சினைகள் காணப்படுகின்றன. இவை குறித்த ஆய்வாளனால் மேற்கொள்ளப்படும் ஆய்வுகளில் பெரும் சவால்களாக உள்ளன.

**1. அகவயரீதியான சவால்கள்:**

**முற்கோடல் எண்ணங்கள் :**

உளவியல் ஆய்வுகளை மேற்கொள்ளும் ஆய்வாளனிடம் காணப்படும் ஆய்வுப் பரப்பு, ஆய்வுக்கு உட்படுத்தப்படுவோர், ஆய்வுப் பிரதேசம் குறித்த முற்கோடல் எண்ணங்கள், அகவயப்பாடு மற்றும் ஆளுமை சார் பிரச்சனைகள் என்பன பெரும் சவாலாக காணப்படுகின்றது. உதாரணமாக குறித்த பிரதேசத்தில் பெண்களே அதிகளவு மன அழுத்தத்திற்கு உள்ளானவர்கள் என்ற முற்கோடல் சிந்தனையுள்ள ஆய்வாளர் அதே சிந்தனையுடன் ஆய்வில் ஈடுபடும் போது சில நேரம் அந்த ஆய்வில் ஆண்களே அதிகளவில் மன அழுத்தத்திற்கு உள்ளானவர்கள் என்ற உண்மை புலப்படும் சந்தர்ப்பத்தில் ஆய்வாளன் தன் ஆய்வு குறித்து மனக்குழப்பம் அடைவதையும் ஆய்வில் பின்வாங்குவதையும் அல்லது முழுமையாக ஆய்வு முயற்சியை கைவிடுவதையும் குறிப்பிடலாம்.

**நம்பிக்கையின்மையும் பயமும் :**

உளவியல் ஆய்வாளர்களிடையே மிகவும் பொதுவான பிரச்சனைகளில் ஒன்றாக இது காணப்படுகின்றது. அதாவது குறைந்த சுயமதிப்புடைய ஆய்வாளர்கள் குறைவான உந்துதலை உணர்கின்றனர். இதனால் அவர்களது ஆய்வின் தரம் பாதிக்கப்படுகின்றது. உதாரணமாக பல்கலைக்கழகங்களில் பல மாணவர்கள் இறுதி வருடத்தில் ஆய்வு மேற்கொள்ள வேண்டுமே என்ற பயத்தினாலும் தம்மீது தன்னம்பிக்கை அற்ற தன்மையினாலும் பொதுக்கலையை



தெரிவு செய்வதையும் இன்னும் இறுதி வருடத்தில் படித்துக் கொண்டு சிறப்புக்கலையை தொடர மறுப்பதையும் குறிப்பிடலாம்.

**அறிவின்மை :**
உளவியல் ஆய்வுகளை மேற்கொள்ளும் ஆய்வாளர்கள் பகுப்பாய்வு ரீதியாக சிந்திக்க தெரியாதவர்களாகவோ நுண்ணறிவற்றவர்களாகவோ சிறந்த எழுத்தாற்றல் மற்றும் பேச்சாற்றல் இல்லாதவர்களாகவோ காணப்படின் குறித்த ஆய்வைத் திறம்பட மேற்கொள்ள முடியாது. உதாரணமாக ஆய்வு செயல்முறைகள் தொடர்பான பூரண விளக்கம் இல்லாத ஒருவரது ஆய்வு ஏனைய உளவியல் நிபுணர்களால் நிராகரிக்கப்படுவதனை குறிப்பிடலாம்.

### 2. புறவய ரீதியான சவால்கள் :

**உடலியல் அசாதாரண நிலைமை:**
ஆய்வாளனுக்கு உடலில் ரீதியாக ஏற்படும் நோயின் நிலைமைகள் மற்றும் குறைபாடுகள் ஆகியன குறித்த ஆய்வில் பெரும் சவாலாக காணப்படும். உதாரணமாக குறித்த காலவரையிலுள்ள ஆய்வினை மேற்கொள்ளும் ஆய்வாளர் ஒருவர் விபத்துக்குள்ளாகி உடல் ரீதியாக பலவீனப்படும்போது குறித்த ஆய்வினை வெற்றிகரமாக செய்து முடிக்க இயலாத நிலை ஏற்படும். இது பெரும் சவாலாகும்.

**புறக் குறுக்கீடுகள் :**
இதனுள் காலநிலை மாற்றம், தொற்று நோய்த்தாக்கம், வறுமை, போக்குவரத்து வசதியின்மை, இரைச்சல் போன்றவற்றை குறிப்பிடலாம். உதாரணமாக ஆய்வுக்கென ஆய்வாளன் தெரிவு செய்த பிரதேசத்தில் திடீரென காலநிலை மாற்றம் ஏற்படும் போது ஆய்வு இடைநிறுத்தப்பட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படல். அவ்வாறே மனிதர்களை நேர்காணல் முறையில் ஆய்வு செய்யும் போது குறுக்கிடும் இரைச்சல் ஆய்விற்கான சவாலாகும்.

## ஆய்வுக்கு உட்படுத்தப்படுவோர் சார்ந்த பிரச்சினைகள்

### 1. அகவயரீதியான சவால்கள்

**சந்தேகம் :**
ஆய்வுக்கு உட்படுத்தப்படுவோர் தான் கூறும் விடயங்களானது இரகசியத்தன்மை பேணப்படுமா? இல்லையெனில் தன் சார்ந்த விடயங்கள் பிறருக்கு தெரிந்து விடுமா? என்று சந்தேகம் கொண்டிருக்கும்போது ஆய்வின் போது உண்மைத்தன்மையை மறைக்கக்கூடும். இது உளவியல் ஆய்வின் பிரதான சவாலாகும். உதாரணமாக தமது உண்மை நிலை தெரிந்து விடக்கூடாது என்பதற்காக



பொய்யான தகவல்களை வழங்குவதுண்டு. இதன் போது குறித்த ஆய்வின் முடிவுகள் தீர்க்கமானதாகவும் உண்மைத் தன்மை பொருந்தியதாகவும் காணப்படாதிருப்பது ஒரு சவாலாகும்.

**பயம் :**

உளவியல் ஆய்வு என்றால் சாதாரணமாக ஒவ்வொருவருக்கும் சிறிய பயம் இருக்கத்தான் செய்யும். ஏனெனில் எல்லா மனிதருமே ஏதோ ஒரு வகையில் உளரீதியான தாக்கத்திற்கு உள்ளாகி இருப்பர். இதன் போது ஆய்வுக்கு உட்படுத்தப்படுவோர் ஆய்வாளர்கள் தம்மை உளநோயாளர்களாக அடையாளப்படுத்தி விடுவார்களோ என்ற பயம் கொண்டிருப்பர். உதாரணமாக போதைப்பொருள் பாவனைக்கு அடிமையானவர்களும் உளதாக்கங்களும் என்ற ஆய்விலே ஆரம்பத்தில் பங்கு பற்றிய பாவணையாளர்கள் சிகிச்சை எனும் பெயரில் தம்மை வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்வார்களோ? அல்லது தாம் வாழ தகுதியற்றவர்கள் ஆகிவிடுவோமோ? என்ற மனப்பயங்களினால் ஆய்வுகளிலிருந்து இடை விலகுவதை குறிப்பிடலாம்.



**மனவிரத்தி மற்றும் என அழுத்தம்:**

உதாரணமாக ஆரம்பத்தில் தற்கொலை எண்ணம் கொண்டவர்களும் தற்போது அதிலிருந்து மீண்டவர்களுமான மக்களிடத்தில் மேற்கொள்ளும் ஆய்வுகளில் அவர்களது உள்ளக்குமுறல்கள், ஏமாற்றங்கள், கவலைகள் ஆகியன மேலெழும்போது மனவிரத்திக்கு உள்ளாகி திரும்பவும் அவர்களுடைய தற்கொலை எண்ணங்கள் துளிர் விட ஆரம்பித்தல். இது உளவியல் ஆய்வின் பெரிய சவாலாகும். இதுகுறித்து ஆய்வாளர்கள் மிகுந்த கவனம் செலுத்துவதுடன் ஆய்வு முடிவில் அவர்களுக்கான உள ஆற்றுப்படுத்தலை வழங்குதல் வேண்டும்.

## 2. புறவய ரீதியான சவால்கள் :

**ஆய்வுக்கு உட்படுத்தப்படுவோரின் உடல் நலமின்மை:**

உதாரணமாக காலக்கெடு விதிக்கப்பட்ட நோயாளர்களும் உளதாக்கங்களும் என்ற தலைப்பில் ஆய்வுக்கு உட்படுத்தப்படுவோர் ஆய்வுக்காலபகுதியில் உடல்ரீதியான அசாதாரண நிலைகளை அடைதல் அல்லது இறந்து போதல். இதனால் குறித்த ஆய்வு முழுமை பெறுவது என்பது பெரும் சவாலாகும் அத்தோடு புலன்குறைபாடு உடையவர்கள், நினைவாற்றல் இழப்பு, ஆளுமைக்கோளாறு உடைய நபர்களை ஆய்வுக்கு உட்படுத்துவது என்பதும் கடினமானதாகும்.

**காலநிலை மாற்றம், இரைச்சல் போன்றவற்றையும் குறிப்பிட முடியும்.**

## ஆய்வுச்செயன்முறை சார்ந்த பிரச்சினைகள்

உளவியல் ஆய்வுகளை பொறுத்தவரையில் குறித்த ஆய்வு ஒன்றினை மேற்கொள்வதற்கு முன் ஆய்வு திட்டம் ஒன்றை தயாரிக்க வேண்டும். ஆய்வு திட்டமானது பல்வேறு பிரிவுகளைக் கொண்டு காணப்படும். இத்தகைய செயல்முறைகளில் ஏற்படும் சிக்கல்களும் உளவியல் ஆய்வுகளில் சவால்களாக காணப்படுகின்றன.

**ஆய்வை திட்டமிட்டு முன் வைப்பதில் ஏற்படும் தவறுகள்:**
ஆய்வை திட்டமிடுவதை பிற்போடுதல் என்பது ஆய்விற்கான முதற்கட்ட சவாலாகும். உதாரணமாக பட்டப்பின் கற்கை நிகழ்ச்சித்திட்டத்தின் இறுதிக் கட்டம் வரை ஆய்வு பிரச்சினையை தெரிவு செய்வதை பிற்போடுவதை குறிப்பிடலாம்.

**ஆய்வு பிரச்சினையை இனம் காணலில் சிரமம் :**
உளவியலில் ஆய்வு பிரச்சனைகள் தனித்துவமானதும் அளவிடக்கூடியதும் நோக்கத்தை அடையக் கூடியதும் யதார்த்தமானதும் மற்றும் கால எல்லையைக் கொண்டதுமாக இருத்தல் வேண்டும். இல்லையேல் ஆய்வு சிறந்ததாக காணப்படாது. உதாரணமாக உளவியல் துறை பயிலும் மாணவர்கள் முதன்முறையாக ஒரே சந்தர்ப்பத்தில் பொருத்தமான ஆய்வு பிரச்சினையை இனம் காண்பதில் கடினப்பாடு இருப்பதை குறிப்பிடலாம். இது ஒரு சவாலாகும்.

**ஆய்வு பிரச்சினையை பகுப்பாய்வு செய்வதில் உள்ள சிரமங்கள் :**
ஆய்வுப் பிரச்சினை இனங்காணப்பட்டால் மாத்திரம் போதாது. குறித்த ஆய்வு பிரச்சினையை பகுப்பாய்வு செய்ய வேண்டியதும் அவசியமாகும். இதனுள் விடய பரப்பு ஒன்றினை அடையாளம் காணல், உபதலைப்பினை தெரிவு செய்தல், பிரச்சினையை பரிசீலனை செய்தல், பிரச்சினை பற்றிய பகுப்பாய்வை மேற்கொள்ளல், தலைப்பு இனம்காணல் மற்றும் இனங்காணப்பட்ட தலைப்பின் பொருட்டு செயறிட்ட முன்மொழிவை தயார் செய்தல் முதலிய படிமுறைகள் உள்ளடங்குகின்றன. இவற்றை திறம்பட செய்வதில் எதிர்கொள்ளும் சவால்கள்.

**இலக்கிய மீளாய்வில் ஏற்படும் சவால்கள் :**
உளவியலில் எந்த ஆய்விலும் அது சிறியதாயினும் அல்லது பெரியதாயினும் அவ்வாய்விலே



கருத்தில் கொள்ளப்பட்ட விடயம் தொடர்பாக மற்ற ஆய்வாளர்கள் என்ன எழுதியுள்ளார்கள் என்று ஆராய்ந்து பார்ப்பது அவசியமாகும். இதற்கென குறித்த ஆய்வுத்தலைப்புடன் தொடர்புடைய புத்தகங்கள் மற்றும் கட்டுரைகள் தேவைப்படும் போது அவை கிடைத்து விடும் என்பதற்கு உத்தரவாதம் இல்லை என்பதும் ஒரு சவாலாகும்.

இவற்றைவிட தரவு சேகரித்தலில் காணப்படும் சிரமங்கள், தரவுகளைத் திரட்டும் நுட்பங்கள் மற்றும் கருவிகள் குறித்த சவால்கள், தரவுகளை பகுப்பாய்வு செய்வதில் காணப்படும் இடையூறுகள், அறிக்கைப்படுத்துவதில் காணப்படும் சிரமங்கள் மற்றும் ஆய்வின் பொருட்டு ஏற்படும் செலவுகள் ஆகியன உளவியல் ஆய்வுகளில் எதிர்கொள்கின்ற சவால்களாக காணப்படுகின்றன.

இலங்கை நாட்டைப் பொறுத்த வரையில் ஆய்வுக்கான போதுமான பயிற்சிகள் முன்னெடுக்கப்படாமை, ஆய்வுப் பண்பாடு பெரிதாகக் கட்டி எழுப்பப்படாமை, ஆய்வு மேற்பார்வைக்குரிய ஆளணியினர் போதாதிருத்தல், ஆய்வுக்குரிய ஊக்கம் காணப்படாமை, தரவு மற்றும் தகவல் பெறுவதில் பல்வேறு இடர்பாடுகள் காணப்படல் முதலியன பாரதூரமான சவால்களாக காணப்படுகின்றன.

உளவியலானது வளர்ந்து வரும் துறையாததால் உளவியல் ஆய்வுகளில் ஏற்படும் சவால்களை குறைக்க வேண்டியது அவசியமாகும். அந்த வகையிலே உளவியல் துறை சார் மாணவர்களை ஆய்வு குறித்து ஊக்கப்படுத்துதல், உளவியல் ஆய்வு குறித்த பயிற்சிகளை வழங்குதல், ஆய்வாளர்களுக்கு தேவையான பண, பொருள் மற்றும் மனித உதவிகளை உருவாக்குதல், உளவியல் ஆய்வுகளின் பிற்பாடு ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டோரது நலன் பேண் நடவடிக்கைகளை வலுப்படுத்துதல், உளவியல் ஆய்வுகளின் அவசியத்தை எடுத்துரைத்தல், மேற்கொள்ளப்பட்ட உளவியல் ஆய்வுக்கட்டுரைகளை பதிப்பித்து வெளியிடல் முதலிய நடவடிக்கைகளை மேற்கொண்டு குறித்த சவால்களை குறைப்பதற்கு முயற்சி செய்ய வேண்டும்.



## துமியின் சிறுவர் தினக் கொண்டாட்டம்





நகுலேஸ்வரம் முன்பள்ளி-கீரிமலை சிறுவர் தினம் மற்றும் ஆசிரியர் தின நிகழ்வில் தமிழ்க் கல்விக் கூடம் குறோளி - ஐக்கிய இராச்சியம் (Tamil Learning Centre Crawley) துமி அமைப்பின் ஊடாக முப்பதுக்கும் மேற்பட்ட சிறார்களுக்கு புத்தகப் பொதி, காலணி மற்றும் கற்றல் உபகரணங்களை வழங்கினார்கள்.





## விவசாயத்தில் நவீன நுட்பங்கள்

இலங்கையில் டிஜிட்டல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி விவசாயத்தை மேம்படுத்துவதற்காக பில் மற்றும் மெலிண்டா கேட்ஸ் நிறுவனத்துடன் அரசாங்கம் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளது.

இந்த ஒப்பந்தத்தின்படி, மேற்கொள்ளப்படும் பணிகளில் ஒன்று விவசாயத்துறையில் உற்பத்தி மற்றும் ஊட்டச்சத்தை அதிகரிக்கும் நோக்கத்துக்காக டிஜிட்டல் தொழில்நுட்பத்தை பயன்படுத்துவதற்கான மென்பொருளை அறிமுகப்படுத்துவதாகும்.



விவசாயத் தொழிலை அபிவிருத்தி செய்வதற்காக ஏழு அமைச்சுக்களிடமிருந்து உரிய தரவுகள் பெறப்பட்டு இத்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. புதிய மென்பொருள், உரங்களைப் பயன்படுத்துவதன் மூலம் விளைச்சலை நேரடியாக அளவிடுவதற்கும், கிடைக்கும் விளைச்சலைப் பாதுகாப்பதற்கும் தேவையான வழிகாட்டுதலை விவசாயிகளுக்கு வழங்கும் திட்டமாகவும் இது அமையும்.

இலங்கையின் விவசாய அபிவிருத்திக்காக 250 மில்லியன் டொலர்கள் மானியமாக இத்திட்டத்தின் மூலம் பெறப்பட்டு விவசாயத் துறையில் தரவுகளை சேகரித்து நெல் மற்றும் ஏனைய பயிர்களின் ஊட்டச்சத்தை அதிகரிப்பதே இதன் முதன்மை நோக்கமாகும்.




எஸ்.எஸ்.நுஜன்

# சூடு பிடிக்கிறது உலகக் கிண்ணம் 2023

கடந்த மாதம் ஐந்தாம் திகதி, 2019 கிரிக்கெட் உலக கிண்ண இறுதி போட்டியில் மோதிய இங்கிலாந்து - நியூஸிலாந்து அணிகள் இடையேயான போட்டியுடன் ஆரம்பமானது. இம்முறை நியூஸிலாந்து போட்டியில் வெற்றி பெற்றது மட்டுமின்றி இங்கிலாந்தை விட அதிக நான்கு மற்றும் ஆறு ஓட்டப்பெறுதிகளையும் பெற்றுக்கொண்டது.

**விளையாடும் 10 அணிகளும் தலா ஐந்து ஆட்டங்களை விளையாடி உள்ளநிலையில் அணிகளின் நிலை.**

2023 ம் ஆண்டுக்கான கிரிக்கெட் உலக கிண்ண தொடரை நடாத்தும் இந்தியா தான் விளையாடிய ஐந்து போட்டிகளிலும் வெற்றி பெற்று முன்னிலை வகிக்கிறது. மீதம் உள்ள நான்கில் இரண்டில் வென்றால் அரையிறுதியும் உறுதியாகிவிடும் . இங்கிலாந்தில் நடந்த 1999 கிரிக்கெட் உலக கிண்ண தொடரில் எவ்வாறு லான்ஸ் க்ளுசெனீர் அதிரடி காட்டி, தென்னாப்பிரிக்காவை அரையிறுதிக்கு அழைத்து சென்றாரோ அதுபோல் இம்முறை ஹெய்ன்ரிச் கிளாஸேன் வாணவேடிக்கை நிகழ்த்த ஐந்தில் நான்கு போட்டிகளை வென்றுள்ளது. இத்தொடரில் சிறப்பாக விளையாடும் இந்தியா, நியூஸிலாந்து மற்றும் அதிர்ச்சிகளை கொடுத்து வரும் ஆப்கானிஸ்தான் ஆகிய அணிகளுடன் மீதமுள்ள நான்கு ஆட்டங்களில் மூன்றினை ஆட வேண்டியுள்ளது.



இது இவர்களின் அரையிறுதிக்கான தடையாக உள்ளது, ஆனால் இந்த மூன்றில் ஒன்றை வென்றாலும் நிகர ஓட்டவிகித அடிப்படையில் இவர்களால் அரையிறுதிக்கு முன்னேற முடியும்.

கடந்த வருடங்களில் நடந்த எல்லா ஐசிசி தொடர்களிலும் அரையிறுதிக்கு முன்னேறும் அணியாகவுள்ள நியூஸிலாந்து இம்முறையும் ஐந்தில் நான்கு ஆட்டங்களை வென்றுள்ளது. அதிரடி காட்டும் தென்னாபிரிக்கா மற்றும் நியூஸிலாந்துக்கு உலக கிண்ணத் தொடர்களில் சிக்கலை தரும் ஆஸ்திரேலியா ஆகிய அணிகளுடனான போட்டிகள் மீதம் இருப்பினும் இலங்கை மற்றும் பாக்கிஸ்தானுக்கு எதிரான போட்டிகள் பெங்களூருவில் நடைபெறுவதால் இம்முறையும் அரையிறுதிக்கு முன்னேறும் வாய்ப்புகளானது, நியூஸிலாந்துக்கு பிரகாசமாக உள்ளது.

உலக கிண்ண தொடர் என்றால் வீறு கொண்டு எழும் ஆஸ்திரேலியா, தனது முதல் இரு ஆட்டங்களிலும் படு தோல்வி அடைந்தது. பின்னர் இலங்கை, பாக்கிஸ்தான் அணிகளை வீழ்த்தியதுடன் நெதர்லாந்து உடனான போட்டியில் கிரிக்கெட் உலக கிண்ணத்தில் ஓட்டங்கள் (309) அடிப்படையில் பெறப்பட்ட மிக சிறந்த வெற்றியை பெற்றது. நியூஸிலாந்து, இங்கிலாந்து, ஆப்கானித்தான் மற்றும் பங்களாதேஷ் உடனான போட்டிகள் மீதமுள்ள நிலையில், அரையிறுதிக்கு முன்னேறி உலக கிண்ணத்தை வெல்லக் கூடிய அணிகளில் ஒன்றாக ஆஸ்திரேலியா பார்க்கப்படுகிறது.

மற்றைய அணிகளில் இலங்கை, பாக்கிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ்தான் அணிகள் தலா இரு ஆட்டங்களில் வென்றுள்ளன. இவர்கள் அரையிறுதிக்கு தகுதி பெற மீதமுள்ள நான்கில் மூன்று ஆட்டங்களில் வெல்வதுடன் மறை பெறுமானத்திலுள்ள தமது நிகர ஓட்டப்பெறுதியை அதிகரிக்க வேண்டிய நிர்ப்பந்தத்தில் உள்ளனர். தலா ஒரு போட்டியில் வென்ற பங்களாதேஷ், இங்கிலாந்து மற்றும் நெதர்லாந்து அணிகள், வருகின்ற நான்கு போட்டிகளிலும் வென்று மறை பெறுமானத்திலுள்ள தமது நிகர ஓட்டப்பெறுதியை அதிகரித்தால் மட்டுமே அரையிறுதிக்கு முன்னேற முடியும். தற்போது, கணித அடிப்படையில் எல்லா அணிகளும் அரையிறுதிக்கு முன்னேறும் வாய்ப்புகளை கொண்டிருந்தாலும் இந்தியா, தென்னாபிரிக்கா, நியூஸிலாந்து, மற்றும் ஆஸ்திரேலியா ஆகிய நான்கு அணிகளும் அறையிருக்கான ஓட்டத்தில் முன்னிலையில் உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.



**விளையாடும் 10 அணிகளும் தலா ஐந்து ஆட்டங்களை விளையாடி உள்ளநிலையில் பெரிய அணிகளுக்கான அதிர்ச்சி தோல்விகள்.**

அதிகளவான ஓட்டடங்கள் குவிக்கப்படும் டெல்லி மைதானத்தில் 285 என்ற வெற்றியிலக்கை நோக்கி ஆடிய இங்கிலாந்தை 215 ஓட்டங்களுக்குள் ஆட்டமிழக்க செய்து 2023ம் ஆண்டு கிரிக்கெட் உலக கிண்ணத்தின் முதலாவது அதிர்ச்சி வைத்தியத்தை ஆப்கானிஸ்தான் நிகழ்த்தியது.

தர்மசாலா மைதானத்தில் 246 ஓட்டடங்களை 43 பந்துபரிமாற்றங்களில் துரத்திய தென்னாப்பிரிக்காவை 207 ஓட்டங்களுக்குள் சுருட்டிய நெதர்லாந்து, இரெண்டே நாளில் இத்தொடரின் இரெண்டாவது அதிர்ச்சி வெற்றியை பெற்றது. இதுவரை பாக்கிஸ்தான் அணியை ஒருநாள் சர்வதேச போட்டிகளில் வெல்லாத ஆப்கானிஸ்தான், துரத்தி வெற்றிபெறுவதிற்கு கடினமான சென்னை போன்ற ஆடுகளத்தில் 283 ஓட்டங்களை துரத்தி அடித்து எட்டு விக்கெட்களால் வென்று வரலாற்று முக்கியத்துவமான வெற்றியை பெற்றது.

இதுவரை துடுப்பாட்டத்தில் தென்னாபிரிக்காவின் குயின்டன் டி கோக் (407) அதிக ஓட்டங்களை குவித்துள்ள நிலையில், விராட் கோஹ்லி (354), டேவிட் வார்னர் (332), ரோஹித் சர்மா (311) மற்றும் மொஹம்மட் ரிஸ்வான் (302) ஆகியோர் அடுத்தடுத்த இடங்களில் உள்ளனர். பந்துவீச்சில் ஆஸ்திரேலியாவின் ஆடம் சம்பா 13 இலக்குகளை வீழ்த்தி முன்னிலையில் இருக்க, மிட்ச் சாண்ட்னெர் (12), டில்ஷான் மதுஷங்க (11), ஜஸ்பிரிட் பும்ரா (11) மற்றும் மட் ஹென்றி (10) ஆகியோர் அடுத்தடுத்த இடங்களை பிடித்துள்ளனர்.







